# ஹேமசந்திர பருவா

ஜதீந்திரநாத் கோஸ்வாமி



T
891.450 92
B 288 G

T
891.450 92
B 288 G





ஹேமசந்திர பரூவா

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனனுக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து இந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் - கி.பி. இரண்டாம் நூற்றாண்டு - படஉதவி : நேஷனல் மியூஸியம், புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# ஹேமசந்திர பரூவா

மூலம் :

ஜதீந்திரநாத் கோஸ்வாமி

தமிழாக்கம் :

வி. கிருஷ்ணமூர்த்தி

சாகித்திய அக்காதெமி

*Hemchandra Barua*— Tamil translation by V. Krishnamoorthi of Jatindranath Goswami's monograph in English, Sahitya Akademi (1989) **SAHITYA AKADEMI**
REVISED PRICE Rs. 15-00

© சாகித்திய அக்காதெமி
முதல் வெளியீடு 1989

T
891.450 92
B 288 G

**சாகித்திய அக்காதெமி**

தலைமை அலுவலகம் :

ரவீந்திரபவன், 35, பெரோஸ்ஷா சாலை, புதுதில்லி - 110 001.

கிளை அலுவலகங்கள் :

29, எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018.
பிளாக் V-B, ரவீந்திர சரோபர் ஸ்டேடியம், கல்கத்தா-700 029.
172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை, தாதர், பம்பாய் - 400 014.

Library IIAS, Shimla
T 891.450 92 B 288 G
00117428

R **SAHITYA AKADEMI**
REVISED PRICE Rs. 15-00

Indian ... SHIMLA
117428
14.12.04

ஸ்திரீ சேவா மந்திர் பிரஸ், சாலிகிராமம் - 600 093.

# உள்ளே . . . .


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அஸ்ஸாமில் ஆங்கிலேய ஆட்சித் தொடக்கம் | ... | 7 |
| 2. | வாழ்க்கையும் வாழ்க்கை நெறியும் | ... | 11 |
| 3. | சமூக சீர்திருத்தவாதி | ... | 25 |
| 4. | அஸ்ஸாமிய மொழியின் அறிமுகம் : ஹேமசந்திரரின் பங்கு | ... | 29 |
| 5. | எழுத்தாளர்களின் முன்னோடி | ... | 34 |
| 6. | அஸ்ஸாம் செய்தி | ... | 49 |
| 7. | முடிவுரை | ... | 54 |
| | நூல் விவர அட்டவணை | ... | 57 |

# 1. அஸ்ஸாமில் ஆங்கிலேய ஆட்சித் தொடக்கம்

அஸ்ஸாமின் வரலாற்றில் 19-ஆம் நூற்றாண்டு ஒரு திருப்பம் எனக் கூறலாம். 13-ஆம் நூற்றாண்டில் அஸ்ஸாமில் நுழைந்த **தாய்** வம்சா வழியினரின், கிளையான அகம்ஸ் என்ற பிரிவினர் அஸ்ஸாமைத் தங்கள் சொந்த நாடாக்கிக் கொண்டு, அறு நூறு ஆண்டுகள் ஆண்டனர். 18-ஆம் நூற்றாண்டின் மத்தியில் இவர்களின் ஆதிக்கம் குறைய ஆரம்பித்தது. 1769-ஆம் ஆண்டு ஏற்பட்ட **மாமோரியா** எழுச்சியும், அரச குடும்பத்தினரிடையே மத சகிப்புத் தன்மை குன்றியதுமே இதற்குக் காரணங்கள் எனலாம். அகம்ஸ் ஆட்சியாளர்களின் கடைசி பத்தாண்டு களில் உள்நாட்டுக் குழப்பமும், சண்டையும் நிறைந்திருந்தன. பலம் பொருந்திய அரசின் சீர்குலைவுக்கு இவையும் காரணம். 1817-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஏற்பட்ட பர்மியர்களின் படையெடுப்பு, சரிபாதிக்கும் அதிகமான மக்களை அழித்து குடியேற்றங்களைத் தடை செய்தது. பர்மியர்களின் ஆக்கிர மிப்பு நாட்டை அழித்தது. இந்த நிலையை, 1826-ஆம் ஆண்டு, ஆங்கிலேயர்கள் ஓரளவு சீராக்கினார்கள். 1826-ஆம் ஆண்டு பிப்ரவரி 26-ந்தேதி, பர்மிய அரசன் **யண்டேபா** ஒப்பந்தத் தின் மூலம், அஸ்ஸாமின் மற்ற பகுதிகளையும், ஆங்கிலேய அரசுக்கு அளித்தான். ஆங்கிலேயர்களின் முயற்சி இல்லை யெனில் அஸ்ஸாம் ஒரு பர்மிய மாகாணமாக உருவெடுத் திருக்கும்; அல்லது மலைவாழ் மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும். அந்த முயற்சி நல்ல நேரத்தில் நடந்தது.[1] அஸ்ஸாம் மாநிலத் தவரை விட்டுவிட்டு, வேலைக்குத் தகுந்தவர்களை, பக்கத்தி லுள்ள வங்கத்திலிருந்து அஸ்ஸாமிற்கு அழைத்தார் டேவிட் ஸ்காட் என்ற ஆங்கில அதிகாரி. இக்கொள்கை உயர்ந்த வகுப்பினரிடையே ஒரு வெறுப்பை ஏற்படுத்தியது.[2] 1828-இல் ஆங்கிலேய அரசை தூக்கியெறிய முயற்சி செய்த **கோம்தர் கோன்வாரின்** சதியைப் பின்பற்றி பீலி, ஜீரம், மற்றும் பலர் 1830-இல் முயற்சி செய்தனர். கடைசியாக 1832-ஆம் ஆண்டு கப்பம் கட்டுவதற்கு ஈடாக மேல் அஸ்ஸாம் பகுதியை, அகம்

1 பொலிடிகல் ஹிஸ்டரி ஆப் அஸ்ஸாம், H.K. போர்பூசாரி, பக்கம் 6.

2 முன்னது பக்கம் 19.

ராஜ வம்சத்தவரான **புரந்தர் சின்காவுக்கு** ஆங்கில அரசாங்கம் அளித்தது. கீழ்ப்பகுதி ஆங்கில அரசிடமே இருந்து வந்தது. 1838-ஆம் ஆண்டு புரந்தர் சின்காவிடமிருந்து ஆங்கில அரசே ஆதிக்கத்தைப் பெற்று அஸ்ஸாமின் முழுப் பகுதியையும், நேரடி ஆட்சிக்குக் கொண்டுவந்தது.

ஆங்கிலேயர்கள், அஸ்ஸாமை எடுத்துக்கொண்ட போது, அஸ்ஸாமிய மொழியே நீதி மன்றங்களிலும், பள்ளிகளிலும் வழக்கில் இருந்தது. சீக்கிரமே அண்டைமாநிலமான வங்கத்திலிருந்து உதவியாளர் வேலைக்கு ஆள் சேர்க்க ஆரம்பித்தனர், ஆங்கிலேயர்கள். ஆங்கிலேய அதிகாரிகள் அஸ்ஸாமிய மொழியில் தேர்ச்சியற்றவர்களாக இருந்தபடியால், தங்களின் கீழ் வேலை பார்க்கும் உதவியாளர்களையே நம்ப வேண்டியிருந்தது. அவ்வுதவியாளர்கள், அஸ்ஸாமிய மொழிக்கு ஓர் உரிய இடத்தைத் தரவில்லை. அஸ்ஸாமிய மொழி, வங்க மொழியின் ஒரு வேறுபாடே எனக் கருதினர். நீதிமன்றங்களிலிருந்து, அஸ்ஸாமிய மொழி அகற்றப்பட்டு, வங்கமொழி உபயோகப்படுத்தப்பட்டது. சிறிது நிரந்தரம் ஆனவுடன், ஆங்கிலேயர்கள், மேற்கத்திய நடைமுறைகளையும், எண்ணங்களையும், வாழ்க்கை முறைகளையும் புகுத்தினர். பண்டைய அஸ்ஸாமின், பழக்க வழக்கங்கள், சட்ட திட்டங்கள் எல்லாம், ஒரு மாற்றத்திற்கு உள்ளாயின. மேல் அஸ்ஸாம் மாநிலத்தில் சோதனைக்காக அரசாங்கம் விளைவித்த தேயிலைத் தோட்டம் வெற்றி பெற்றதால் அரசாங்கமே 1839-ஆம் ஆண்டு அஸ்ஸாம் தேயிலைக் கம்பெனியைத் துவக்கியது.

அஸ்ஸாமிற்கும், கல்கத்தாவுக்கும் இடையே முதல் நீராவிக் கப்பல் 1846-ஆம் ஆண்டு விடப்பட்டது. தேயிலைத் தோட்டங்கள் அதிகரிக்கவே, வெவ்வேறு மாநிலத்திலிருந்தும், தொழிலாளர்கள் வர ஆரம்பித்தனர். பெரிய வியாபாரச் சந்தைகள், நாணயப் புழக்கம், பெரிய பங்களாக்கள் மற்றும் தேயிலைத் தொழிற்சாலை கட்டும் பணி, போன்றவை அஸ்ஸாமின் கலாச்சாரம், சமூக வாழ்க்கை, பொருளாதாரம் போன்றவற்றில் சிறந்த மாறுதல்களை ஏற்படுத்தியது.

அரசாங்க மொழி, வங்காளமும், அஸ்ஸாமியும் சேர்ந்த ஒரு கலவை மொழியாக இருந்தது. இதன் காரணமாக மக்களுக்கு அவர்களின் தாய்மொழியான அஸ்ஸாமிய மொழி மீதே ஒரு வெறுப்பு ஏற்பட்டது எனலாம்.

மேன்மக்கள் என்ற ஒரு தனி வகுப்பு இக்கால கட்டத்தில் உருவாக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் ஆங்கிலப் பள்ளிகளுக்

குக் குழந்தைகளை அனுப்ப மக்கள் விரும்பவில்லை. 1836-ஆம் ஆண்டு கௌகாத்தியில் முதல் ஆங்கிலப்பள்ளியும் 1841-ஆம் ஆண்டு சிப்சாகரில் இரண்டாவது ஆங்கிலப்பள்ளியும் தொடங்கப்பட்டன. படித்த அஸ்ஸாமியர்களுக்கு, ஆங்கில அரசாங்கத்தில் வேலை வாய்ப்புகள் ஏற்பட்டமையால், உயர் வகுப்பைச் சேர்ந்த அஸ்ஸாமியர்கள் தங்கள் குழந்தைகளை அப்பள்ளிகளுக்கு அனுப்பினர்.

1800-ஆம் ஆண்டுகளில், பலதரப்பட்ட கிறித்துவ மதப் பிரசாரகர்களின் வருகை ஒரு இலக்கிய மறு மலர்ச்சியின் தொடக்கமாக அமைந்தது. அதுவே நவீன இந்திய இலக்கியத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாக உருவெடுத்தது. 1836-ஆம் ஆண்டு அஸ்ஸாம் மாநிலத்துக்கு வந்த அமெரிக்க பாப்டிஸ்ட் பிரசாரகர்களின் முக்கிய கொள்கை பைபிளைப் பிரசாரம் செய்வதே. வங்க மொழி முன்னுரிமை பெற்றிருந்த போதிலும், அஸ்ஸாமி மொழியை அதன் அழிவிலிருந்து காப்பாற்றி, முன்னேற வழி செய்தது இப்பிரச்சாரங்களே எனலாம்.[1]

1836-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23-ந் தேதி மதிப்பிற்குரிய நாதன் பிரவுன் அவர்களும், மதிப்பிற்குரிய ஆலிவர் கட்டர் அவர்களும், தங்கள் குடும்பத்தாருடன் அஸ்ஸாமின் கிழக்கு மூலையில் உள்ள சடியா என்ற ஊருக்கு வந்தனர். தங்களுடன் ஓர் அச்சகத்திற்குத் தேவையானவற்றையும் கொண்டு வந்து அதைத் துவக்கினார்கள். பின்னர், 1837 — ஜனவரியில் ஒரு பள்ளியைத் துவக்கினர். 1845-இல் இந்தத் தூது கோஷ்டி **நவ்காங்கில்** 3 பள்ளிகளையும், காமரூப்பில் 5 பள்ளிகளையும், சிப்காரில் 14 பள்ளிகளையும் துவக்கினர்.

அஸ்ஸாமிய மொழியில், படங்களுடன் கூடிய ஒரு **நோடாய்** என்ற சஞ்சிகை முதன் முதலாக 1846-இல் இந்தத் தூது கோஷ்டியின் முயற்சியால் சிப்சாகரிலிருந்து வெளிவந்தது. அஸ்ஸாமிய மொழி கற்பதற்கும் இந்தத் தூதுகோஷ்டி அடித்தளமிட்டது எனக் கூறலாம். சிறுவர்களுக்கானப் புத்தகங்கள், இலக்கணப் புத்தகங்கள் மற்றும் அகராதிகளையும், இந்தத் தூதுகோஷ்டி வெளியிட்டது.

இந்தத் தூதுகோஷ்டியின் இலக்கியப் பணிபற்றி கூறுகையில், மதிப்பிற்குரிய என். பிரவுன், எம். பிரான்சன், ஏ. எச். டன்போர்த்; சி.பார்க்கர்;டபிள்யூ.எம்.வார்ட்;ஹெ செல்மேயா;

---

1 எர்லி பிரிட்டிஷ் ரிலேஷர்ஸ் வித் அஸ்ஸாம், எஸ். கே. பூயன், பக்கம் 36.

ஓ.டி. கட்டர் முதலியோர் முதன்மையானவர்கள். இத் தூது கோஷ்டி அளிக்கப்பட்ட உதவிகளைப் பெற்றவர்களில் ஆனந்தராம் தீக்யால் பூகன், மற்றும் நிதி லெவி பார்வல் குறிப்பிடத் தக்கவர்கள்.[1]

19-ஆம் நூற்றாண்டில் இந்த மாநிலத்தில் ஒரு பெரிய அரசியல் மாற்றம் ஏற்பட்டது. நவீன அஸ்ஸாம் மாநிலமும் நவீன அஸ்ஸாமிய இலக்கியமும் அரசியல் மற்றும் சமூக, கலாச்சார மாற்றங்களுடன் முன்னேறி வந்த காலம் அது. நாட்கள் செல்லச்செல்ல ஆங்கிலக் கல்வியும்,. மேற்கத்திய எண்ணங்களும், இந்திய மக்களின் சமூகம், மதம், மற்றும் அரசியலில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது எனலாம். அதே சமயத்தில் சமூகக் கொடுமைகளை எதிர்த்துப் பலர் குரல் எழுப்பினர்.[2] சமூக முன்னேற்றம் குறித்தும் குரல்கள் எழுப்பப்பட்டன.[3] 19-ஆம் நூற்றாண்டு, அஸ்ஸாம் மாநிலத்துக்கு மட்டுமின்றி, இந்தியா முழுமைக்கும் மிகச் சிறந்த காலம் எனக் கொள்ளலாம். மற்ற மாநில இளைஞர்களைப் போலவே, அஸ்ஸாமிய இளைஞர்களும், மேற்கத்தியக் கலாசாரத்தின் பக்கம் இழுக்கப்பட்டனர்.

19-ஆம் நூற்றாண்டு அஸ்ஸாமிய இலக்கிய மறுமலர்ச்சியின் ஒரு சகாப்தம் எனக் கூறலாம். அந்த மறுமலர்ச்சி இரு வகைகளில் அஸ்ஸாமில் ஏற்பட்டது. ஒன்று அமெரிக்க பாப்டிஸ்ட் தூதுக் குழுவினரின் செய்கையால்; மற்றொன்று மறுமலர்ச்சி பெற்ற வங்கத்தின் தாக்கத்தால்.

இந்த நேரத்தில்தான் நவீன அஸ்ஸாமிய இலக்கியத்தின் தந்தை எனப்படும் **ஹேமசந்திர பருவா** பிறந்தார். இது ஒரு எதிர்பாராத செயல் என்றபோதும், குறிப்பிடத்தக்கது.

---

1 முன்னது பக்கம் 38.

2 பொலிடிகல் ஹிஸ்டரி ஆப் அஸ்ஸாம், எச்.கே. போர்பூசாரி, பக்கம் 125.

3 முன்னது பக்கம் 125.

# 2. வாழ்க்கையும் வாழ்க்கை நெறியும்

அஸ்ஸாமில் புகழ் பெற்ற பேஸ்பருவா பரம்பரையில் உதித்தவர் ஹேமசந்திர பருவா. இவரது முன்னோர்களில் ஒருவர் கண்ணோஜைச் சேர்ந்த காலிபோர் ஆவர். அவர் அகம் அரசர் ஜயவத்சிங்கா [1648-63] இந்தியாவின் கிழக்குப் பகுதிகளை ஆண்டு கொண்டிருந்தபோது அங்கு யாத்திரிகராக வந்தார். அரச உதவி கிடைத்ததால் அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டார். காலிபோருக்கு ஆயுர்வேதத் துறையில் இருந்த அறிவுபற்றி அரசருக்கு உயர்ந்த எண்ணம் இருந்தது. அவரைப் பருவா என்ற சிறப்புப் பெயர் கொடுத்துக் கௌரவித்தார். பிறகு அவரை முதல் மருத்துவராக உயர்த்தினார். இவர்களின் வழி வந்தவர்கள் அகம் அரசர்களின் குடும்ப மருத்துவர்களானார்கள்.

சிப்சாகர் ஜில்லாவில் டேர் கோன் அருகில் உள்ள ராஜாபகர் என்ற ஊரில் இவர்கள் வழிவந்த முக்தாராம் பருவா என்பவரும் ஒருவர். நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த முக்தாராம் பருவா ஒரு ரெவின்யூ வட்டத்தின் கலெக்டர். வடமொழியிலும் ஆயூர்வேதத் துறையிலும் கைதேர்ந்தவர். அவருக்கு இரு மனைவிகள். ஒருவர் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றுவிட்டு இறந்துவிட்டார். அக்குழந்தையின் பெயர் ஜோகேஸ்வர். அக் குழந்தை அவனது பாட்டியால் வளர்க்கப் பட்டது. ரூபஹி தேவி என்ற பெண்ணை இரண்டாம் தாரமாகக் கல்யாணம் செய்துகொண்டார். அவருக்கு மூன்று புதல்வர்களும், ஒரு புதல்வியும் உண்டு. அவர்களில் மூத்தவர் ஹேமசந்திரர்.

1835-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ந் தேதி ராஜாபகர் என்ற ஊரில் ஹேமசந்திரர் பிறந்தார். அஸ்ஸாமில் நவீன கல்வியைப் பொறுத்த வரையில், அது ஒரு சிறந்த வருடம் எனலாம். ஏனெனில் அந்த வருடம் தான் முதல் ஆங்கிலப் பள்ளி, கௌகாத்தி ஸ்கூல் (இப்போது காட்டன் காலேஜ் மேல்நிலைப்பள்ளி) கௌகாத்தியில் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது ஆணையராக இருந்த கேப்டன் ஜென்கின்ஸ் அதற்கு மூல காரணம்.

கல்விக்கான வசதிகள் அப்போது மிகக் குறைவு. தோர் கோனிலோ, அருகாமையிலோ பள்ளிகள் இல்லை. வடமொழியிலும், ஆயுர்வேதத்திலும் சிறந்து விளங்கிய முக்தாராம், ஜோகேஸ்வரருக்கு வீட்டிலேயே வடமொழியையும் ஆயுர்வேதத்தையும் கற்பித்தார். தந்தையின் போதனையாலும், கூர்மையான அறிவாலும், வடமொழியிலும், ஆயுர்வேதத்திலும் அவர் சிறந்து விளங்கினார். ஆனால் அவருடைய வாழ்க்கை 18 வயதிலேயே முடிந்துவிட்டது.

ஜோகேஸ்வர் இறந்தபோது, ஹேமசந்திரருக்கு ஒரு வயது. ஜோகேஸ்வரின் அகால மரணம் முக்தாராமை நிலை குலையச் செய்தது. ஆகையால் ஹேமசந்திரர் வயது வந்த போதிலும், அவருக்குக் கல்வி போதிக்க வேண்டிய முயற்சிகளை, முக்தாராம் எடுத்துக்கொள்ளவில்லை. புதல்வனின் கல்வியை ஏன் இப்படிப் புறக்கணிக்கிறீர்கள் என்று கேட்டால், அவர் கூறுவார். "கண்ணும் கருத்துமாகப் படித்த ஒருவனுக்குக் கல்விபுகட்டி நான் என்ன கண்டேன்? துக்கம்தான் மேலிட்டது. கல்வி முடிந்தபின், இயற்கை இவனுடனும் விளையாடினால், அந்த நெருப்பு என்னையும் சுடும். ஆகையால் தான், நான் பேசாமல் இருக்கிறேன். இன்னும் சில நாட்களுக்குப்பின் என்னசெய்வது சரியோ, அதைச் செய்வேன்."[1]

அவரது தீர்மானமற்ற நிலை ஒரு முடிவுக்கு வந்தது. ஹேமசந்திரருக்குக் கல்வி புகட்ட ஆரம்பித்தார். அப்போது ஹேமசந்திரருக்கு வயது ஒன்பது. எழுத்துக்களைச் சொல்லிக் கொடுக்காமல், முக்தாராம், ஹேமசந்திரரைப் பெயர்ச் சொற்களின் வேற்றுமைகளை மனப்பாடம் செய்யச் சொன்னார். அத்துடன் எழுத்துக்களையும் சொல்லிக்கொடுத்தார். இப்படியே எல்லா எழுத்துக்களையும் அறிந்து கொண்டார் ஹேமசந்திரர். தெரியாதவற்றை, வினைச்சொல்லின் பல உருவகங்களை மனப்பாடம் செய்யும்போது அறிந்துகொண்டார். மெய் எழுத்துக்களின் சேர்க்கை பற்றிக் கற்றுக்கொள்ள சிறிது காலம் பிடித்தது. வட மொழியில் உள்ள வினைச் சொல்லின் உருவகங்களையும், பெயர்ச்சொல்லின் வேற்றுமைகளையும், நன்கு அறிந்துகொண்டார். பிறகு பண்டைய அஸ்ஸாமிய கவிதையான **துரோண பர்வ, கர்ண பர்வ,** போன்றவற்றையும், நீதி நூல்களையும் படித்தார். வங்க மொழியின் எழுத்துக்களை அறிந்துகொள்ள ஏதுவாகச் சில

---

1 அஸ்ஸாமிய பாஸர் ஒஜா ஹேமசந்திர பருவா, ஜெ. என். கோஸ்வாமி பக்கம் 20.

நூல்களையும் கற்றறிந்தார். தன் தந்தையின் கீழ் வடமொழி இலக்கணத்தைக் கற்றார்.

1847-இல் மறுபடியும், ஒரு பயங்கர நிகழ்ச்சி ஏற்பட்டது. ராஜாபகர் மற்றும் அதைச் சுற்றிய பகுதிகளில், காலரா நோய் பரவிற்று. ஹேமசந்திரரின் தந்தை அதற்குப் பலியானார். முக்தாராமின் திடீர் மறைவு, குடும்பத்தை நிலைகுலையச்செய்து, மீளாத் துயரத்தில் ஆழ்த்தியது.

அதிர்ஷ்ட வசமாக, சிப்சாகர் வருவாய்த்துறை ஆணையர் அலுவலகத்தில் கண்காணிப்பாளராக வேலை பார்த்து வந்த ஹேமசந்திரரின் சித்தப்பா அக் குடும்பத்திற்கு உதவி செய்ய முன்வந்தார். தனது சகோதரனின் குடும்பத்தை 1847இல், சிப்சாகருக்கே கூட்டிச் சென்றார். சிப்சாகர் நீதிமன்றத்தில் மாதச் சம்பளம் ரூ. 4/– க்கு ஹேமசந்திரர் ஒரு நகல் எடுப்போனாகச் சேர்ந்தார். நகல் எடுப்பதும், வங்க மொழியில் உள்ள நீதிமன்றப் பத்திரங்களைப் படிப்பதுமே அவரது வேலை.

நகல் எடுக்கும் வேலையுடன், டெமஸ்தனீஸுக்கு இருந்த திட நோக்கம் போல, வட மொழியைக் காலையில் வீட்டிலும், மாலையில் உர்பிதார் சிப் சாகரிய பருவாவின் (டோலில்) பள்ளியிலும் கற்றார்.

முன்பு கூறியது போல, சூழ்நிலை மாறும் காலம் அது. மத நெறிகளில் தவறாதவர்கள் மேற்கத்திய பழக்க வழக்கங்களை எதிர்த்தனர். ஆங்கிலம் படிப்பது என்பது சமூகத்தால் ஒதுக்கப்பட்ட செயல். ஆங்கிலம் படிப்பவர்கள் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்டு, அவ்வாறே நடத்தப்பட்டனர். ஹேமசந்திரரின் சித்தப்பா லட்சுமிநாதும் அவ்வாறே எண்ணினார். ஹேமசந்திரர் ஆங்கிலம் கற்க ஆசைப்பட்டார். சரியான தருணம் பார்த்துக் காத்திருந்தார். இதற்கிடையில் ஹிந்தி கற்க விரும்பினார். அதற்காகக் கேப்டன் பிராடியின் இருப்பிடத்திற்கு எப்போதாவது செல்வார். கேப்டன் பிராடி படிப்பவர்களை ஆதரிப்பவர். குறிப்பாக இளைஞர்கள் நன்கு படிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். தனது சித்தப்பாவின் குறிக்கோளுக்கு எதிராக ஆங்கிலம் கற்பது முடியாத காரியம் என்று எண்ணியபோதும், அவருக்குத் தெரியாமல் ஏன் ஆங்கிலம் கற்கக்கூடாது என்று கருதினார். கேப்டன் பிராடியின் வீட்டிற்குச் சென்றபோது, ஆங்கில எழுத்துக்கள் கொண்ட புத்தகம் ஒன்றைக் கேப்டனிடமிருந்து பெற்றார். கேப்டன்,

ஒரு புத்தகத்தைக் கொடுத்தது மட்டுமின்றி, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தேர்வுக்கு வருமாறு அழைத்தார். ஆனால் ஹேமசந்திரருக்குப் படிக்க நேரம் கிட்டவில்லை. அவரது அன்றாட அலுவல்களுக்கே நேரமில்லாதபோது, 15 நாட்களுக்குள், ஆங்கில எழுத்துக்கள் அனைத்தையும் கற்றறிந்தார் என்பது ஆச்சர்யமூட்டும் செய்கைகளில் ஒன்று. அவர் ஆங்கிலம் படிப்பது, சித்தப்பாவிற்குத் தெரிந்துவிட்டது. ஆகையால் உர்பிதார் பரூவாவின் பள்ளியை அவர் விட வேண்டியதாயிற்று. ஆங்கிலம் படிக்கவேண்டும் என்ற மோகத்திற்கும் ஒரு முற்றுப்புள்ளி ஏற்பட்டது.

உர்பிதார் பரூவாவை விட்டபிறகு ஹேமசந்திரர் வடமொழி கற்பதும் நின்றுவிட்டது. இப்போது அவரது சித்தப்பாவிடம், சித்தப்பாவின் புதல்வன் பத்மநாதனுடன் வடமொழி கற்க ஆரம்பித்தார். சிறிது காலம் கழித்து ஜடுநாத் என்பவரிடம் படித்தார்கள். ஜடுநாத் சித்தப்பாவின் வீட்டின் முன் ஒரு பள்ளி நடத்த அனுமதிக்கப்பட்டிருந்தார். பத்மநாதன், ஹேமசந்திரர், மற்றும் சிலர், சிலகாலம் அந்தப் பள்ளியில் படித்தனர். அங்கே படித்ததினால், ஹேமசந்திரருக்கு எவ்வித லாபமும் இல்லை. ஏறத்தாழ ஒரு வருடத்திற்குப் பிறகு, ஆசிரியரும், பத்மநாதனும், காலரா நோய்க்குப் பலியானார்கள். பள்ளியும் மூடப்பட்டுவிட்டது. அப்போது, ஹேமசந்திரர் ஒரு சுதந்திரப் பறவை போல் இருந்தார்.

பழைய நண்பரான குஷ்ராம் கோசை என்பவரை ஒரு நாள் ஹேமசந்திரர் சந்தித்தார். குஷ்ராம் கோசை ஓர் ஆங்கிலப் பள்ளிமாணவர். ஆங்கிலம் படிக்கும்படி ஹேமசந்திரருக்கு அவர் புத்திமதி கூறினார். அந்தப் புத்திமதியை ஏற்று ஹேமசந்திரர் ஆங்கிலம் படிக்க முடிவு எடுத்தார். அப்போது அவருக்கு வயது 20. ஆங்கில எழுத்துக்களையும், இலக்கணத்தையும் படிக்க ஒரு புத்தகத்தையும், நண்பர் ஹேமசந்திரருக்குக் கொடுத்தார். ஆங்கிலம் கற்க எந்த உதவியையும் செய்வதாகவும் உறுதியளித்தார். குஷ்ராம், மற்றும் சில நண்பர்களின் உதவியால், ஹேமசந்திரர், ஆங்கிலப் பாடங்கள் சிலவற்றைப் படித்தார். பிறகு ஆங்கிலப்பள்ளி ஒன்றில் ஆசிரியராக இருந்த **பரமானந்த பாரதி** என்ற ஆசிரியரின் உதவியை நாடினார். அவருடைய கண்காணிப்பு, மற்றும் உதவி, ஹேமசந்திரருக்கு மிகவும் உதவியது. அந்த ஆசிரியரின் உதவியைஎப்போதும் நன்றியுடன் நினைவு கூறுவார். உதவிப் பள்ளி மேலாளரான பிரியலால் பரூவாவிடமும் உதவி பெற்றார். ஹேமசந்திரர் 1858-ஆம்

ஆண்டு சிப்சாகர் **அமெரிக்க பாப்டிஸ்ட் மிஷனில்** இருந்த சில பிரசாரகர்களின் உதவியையும் பெற்றார். அவர்கள் எல்லா விதமான உதவிகளையும் களிப்புடன் செய்தனர். ''தூங்கும் நரி எதையும் பிடிக்காது'' என்ற பொருள்படும் பழமொழியைப் படித்தவுடன் அவர் குதூகலமடைந்தார். அதுமுதல் அவருடைய ஆர்வம் இரட்டிப்பாயிற்று. ஆங்கிலத்தை நன்றாகக் கற்க தனது நேரம் முழுமையும் செலவழித்தார். அந்தப் பழமொழி பற்றி ஹேமசந்திரர் கூறுகிறார். நமது இளைஞர்கள், இந்தப் பழமொழியை நன்கு மனத்தில் இருத்தி அதன்படி நடக்கவேண்டும். இதுவே எனது வேண்டுகோள். அந்த ஆர்வத்தால் தூண்டப்பட்டுதான், நான் இதை இங்கு எழுதுகிறேன்.''[1]

ஹேமசந்திரர் ரகசியமாக ஆங்கிலம் படித்ததால் அது அவரது சித்தப்பாவிற்குத் தெரியவில்லை. அம்மொழியில் ஓரளவு தேர்ச்சி பெற்ற பிறகு வெளிப்படையாகவே அவர் ஆங்கிலம் கற்க ஆரம்பித்தார். அவருடைய சித்தப்பா அவரைக் கண்டிக்காமல், ஆங்கிலத்திலிருந்து வங்காளத்திற்கும், வங்காளத்திலிருந்து ஆங்கிலத்திற்கும் மொழி பெயர்க்கும் சில வேலைகளை ஹேமசந்திரருக்கு அளித்தார். இது ஆச்சரியப்படக் கூடிய செய்திகளில் ஒன்று! ஆசை, முயற்சி, பிடிவாதம், நிதானம், ஆர்வம் போன்றவை காரணமாக, தன் முன்வந்த இடர்ப்பாடுகள் அனைத்தையும் நீக்கி, ஆங்கிலத்தில் நன்கு கற்று தேர்ச்சி பெற்றார்.

உபேந்திரநாத் முக்கோபாத்யாயா கூறுவது போல் சரியான சூழ்நிலை இல்லாத காரணத்தால், ஹேமசந்திரர் சரியாகப் படிக்க இயலவில்லை. இருப்பினும் தனது புத்தி கூர்மையால் அஸ்ஸாமி, வங்காளம், ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் சிறந்த தேர்ச்சி பெற்றார். (சரிதாபீதன் 1908)

கோலகாட் நீதிமன்றத்தில் நிரந்தரப் பணியாளரான பெஞ்சுக்ளார்க் 1857-இல் நடந்த சிப்பாய் கலகத்தில் தொடர்பு கொண்டிருந்த காரணத்தால், தாற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அந்த வேலையில் ஹேமசந்திரர் அமர்த்தப்பட்டார். சிப்பாய் கலகத்தின் மூலம், அஸ்ஸாமில் அகம் மன்னர்களின் ஆட்சியை மறுபடியும் அமைக்க ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கோலகாட் நீதிமன்றத்தில் ஹேமசந்திரருக்குக் கிடைத்த தாற்காலிக வேலை முடிந்து விடவே சிப்சாகர் திரும்பினார். அங்கு, சிப்சாகர் ஆங்கிலப்

---

[1] ஹேமசந்திர பருவா, ஜீவன் சரித். எஸ். எஸ். கடகி, பக்கம் 31.

பள்ளியில் பரமானந்த பாரவியின் ஓய்வுக்குப் பிறகு தாற்காலிக மாக ஆசிரியராக அமர்த்தப்பட்டார். பிறகு 1862-ஆம் ஆண்டுவரை மாதம் ரூ. 25/-சம்பளத்தில் வருவாய்த்துறை பதிவு ஆணைக்காப்பாளராக இருந்தார். அந்த வருடம் நீதித்துறை ஆணையர் சிப்சாகர் வந்தார். அவர் கௌகாத்தித் திரும்பிய வுடன் ஹேமசந்திரரை அவரது அலுவலகத்தில் மொழிபெயர்ப் பாளராக அமர்த்திக்கொண்டார். அதற்காகக் கௌகாத்தி சென்றார் ஹேமசந்திரர். இங்குதான் அவர் புகழ் அடைந் தார் எனக் கூறலாம். தனது சுய சரிதையில் ஹேமசந்திரர் கூறுகிறார். ஆங்கிலம் படிக்கையில், ஏதாவது ஒருநாள் அந்த மொழியை உபயோகப்படுத்தும் அளவுக்கு ஒரு வேலையை நான் ஒத்துக்கொள்வேன் என்று நான் கனவுகூட கண்ட தில்லை. எனது குறிக்கோள் **மாவட்ட ஆட்சியர்** அலுவலக சிரஸ்தாரிலிருந்து ஒரு முன்சீபாக ஆகவேண்டுமென்பதே. ஆகையால் எனது ஆங்கிலத் கையெழுத்தைச் சீர்செய்து கொள்ளவேயில்லை'.[1]

நீதிமுறை ஆணையர் அலுவலகத்தில் மொழி பெயர்ப்பாள ராகச் சேர்ந்த ஹேமசந்திரர் அலுவலக மேற்பார்வையாளராக உயர்த்தப்பட்டார். அந்தப் பதவியை, எடுக்கும் வரை,- அதாவது 1881-ஆம் ஆண்டு வரை அந்தப் பதவியிலேயே இருந் தார். மேஜர் அக்னியூ கோச் பீஹாரின் ஆணையராக நியமிக்கப் பட்டவுடன், ஒரு வருட காலம் காம்ரூப். உதவி ஆணை யர் அலுவலகத்தில் மொழி பெயர்ப்பாளராக ஹேமசந்திரர் பணியாற்றினார். அத் தருணத்தில் தான் மாதம் ரூ. 100/- சம்பளத்தில் உதவிப் பள்ளி ஆய்வாளர் பதவியைப் பெற் றார். மேஜர் அக்னியூ அஸ்ஸாம் திரும்பியவுடன், மாதம் ரூ. 210/- சம்பளத்தில் நீதிமுறை ஆணையர் அலுவலகத்தில், தலைமை உதவியாளர் பதவி பெற்றார் இந்த வேலையை ஒப்புக்கொண்ட பின்னர், மேலாளர் பதவியும் பெற்றார் ஹேமசந்திரர். நீதித்துறைக் கமிஷனர் அலுவலகத்தில் வேலை பார்த்து வந்தபோது, 1875-இல் மேஜர் அக்னியூ கேட்டுக் கொண்டதன் பேரிலும், 1876-இல் முதன்மை **ஆணையர்** செயலர் கேட்டுக்கொண்டதன் பேரிலும், இருமுறை ஹேம சந்திரருக்குக் கூடுதல் துணை **ஆணையர்** வேலை அளிக்கப் பட்டது. அந்தப் பதவி தாற்காலிகமானதால், அதை அவர் ஒத்துக்கொள்ளவில்லை.

---

1 அஸ்ஸாம் பாஸர் ஓஜா, ஹேமசந்திர பருவா.
ஜெ. என். கோஸ்வாமி, பக்கம் 34.

ஒருவேளை அந்த வேலையை ஒப்புக்கொண்டால் மேஜர் அக்னியூ வருத்தப்படுவார் என்று எண்ணினார். தனது சுயசரிதையில் ஹேமசந்திரர் கூறுகிறார். ''அப்போது நான் கொஞ்சம் கலவரமடைந்தேன். ஆனால் இப்போது சந்தோஷமாக இருக்கிறேன். ஏனெனில் நான் கூடுதல் உதவி ஆணையராக புகழ்பெற்று, சந்தோஷமடைவதை விட, இப்போது மிகுந்த ஆனந்தத்துடன் இருக்கிறேன்''.[1] 1881-இல் ஹேமசந்திரர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். அப்போது அவருடைய ஓய்வு ஊதியம் 83 ரூபாய் 5 அணா 3 பைசா. வேலை பார்த்த காலத்தில், ஹேமசந்திரர் மிகவும் மரியாதையாக நடத்தப்பட்டார். தனது வேலையில் திறமை உள்ளவராகவும் புத்தி கூர்மை உள்ளவராகவும் விளங்கினார். அவர் செய்த தொண்டுகளில் ராஜ ராஜேந்திரலால் மித்ராவுக்கு காம்ரூபா, பண்டைய வடமொழி கையெழுத்துப் பிரதிகளைச் சேர்க்க உதவியது குறிப்பிடத்தக்கது. அதற்காக ஹேமசந்திரருக்கு அரசாங்க விருது கிடைத்தது. 1875-இல் ''வங்க சிவில் நிதியை''ச் சொந்தமான படை முறை சாராதவர் கொடுக்க வேண்டும் என்ற தனது யோசனையை, அரசாங்கத்துக்கு அளித்தார். 1881-இல் நிஸ்பி-இராஜ் உதவிக் குத்தகைதாரர்கள் நிலை பற்றிய குறிப்பு ஒன்றை அரசாங்கத்துக்கு அளித்தார். ஒரு சாதாரண எழுத்தராக இருந்தபோதே அவருக்குக் கற்பனா சக்தியும் மனத்தோற்றமும் இருந்தது. இக் காரணங்களாலேயே மேஜர் அக்னியூ அவரை ஒரு உயர் நிலையில் வைத்திருந்தார்.

அவருடைய சொந்த வாழ்க்கை பற்றிச் சிறிதுதான் அறிய முடிகிறது. அவர் முக்தாராமின் இரண்டாவது புதல்வர். பூர்ணாதேவி என்ற பெயருடைய சகோதரியும், துளசிராம், கமலசந்திரர் என்ற பெயருடைய இரு சகோதரர்களும் இருந்தனர் என்பது தெரியவருகிறது.

1858-இல் ஹேமசந்திரர் திருமணம் செய்துகொண்டிருக்கலாம். 1862-இல் அவர் கௌகாத்திக்கு மாற்றப்பட்ட போது, அவர் மனைவி தாய்மை அடைந்திருந்தாள். 1863-இல், சாரதா என்ற பெண்குழந்தையைப் பெற்று எடுத்தாள்; 1865-இல் காலரா நோயினால் இறந்துவிட்டாள். ஹேமசந்திரரின் தாயார் சாரதாவை வளர்த்தார். நிரமாய் பரூவாவைத் திருமணம் செய்துகொண்ட சாரதா, ஹேமசந்திரருக்கு முன்பே இறந்துவிட்டாள். அவளுக்கு ஒரு புதல்வன், இரு புதல்விகள். தனது இளமைப் பருவத்திலேயே அதாவது 30 வயதில் ஹேம

---

1 முன்னது பக்கம் 35.

சந்திரர் மனைவியை இழந்தவராகிவிட்டார். இருதார முறை, பலதார முறை, அப்போது வழக்கில் இருந்தது. வங்கத்தில் துவங்கிய விதவை மறுமணத்திற்கான இயக்கங்கள் அவரது உள்ளத்தில் ஒரு முத்திரையை ஏற்படுத்தியது. ஈஸ்வர சந்திர வித்யா சாகரின் விதவைத் திருமண இயக்கத்தின் தீவிர ஆதரவாளர் ஹேமசந்திரர். விதவைத் திருமணம் குறித்துப் பின்னால் நன்கு விளக்கப்பட்டுள்ளது. இருப்பினும், ஹேமசந்திரர், மறுமணம் செய்துகொள்ள விரும்பவில்லை.

அவருடைய இல்லம் கௌகாத்தியில் உசன்பசார் என்ற இடத்தில் இருந்தது. அது ஒரு பெரிய பங்களா போன்ற வீடு. இங்குதான் ஹேமசந்திரர் அவரது நூல்களை எழுதினார். அவரது இலக்கியப் பெரும் படைப்பான **ஹேம்-கோஸ்** என்ற அகராதியைப் படைத்தார். தனிமையில்தான் வாழ்ந்தார். புத்தகங்களும், சஞ்சிகைகளும் அவரது தோழர்கள். அவரின் மறைவுக்குப் பிறகு அவரது உயிலில் கூறியபடி வடமொழி மற்றும் ஆங்கிலப் புத்தகங்களோடு, அலமாரிகளும், கௌகாத்தி பள்ளி நூலகத்திற்குக் கொடுக்கப்பட்டது. அவருடைய நண்பர்களில் மதிப்பிற்குரிய மாணிக்சந்திர பருவா; துலால் சந்திர சௌதரி, லஷ்மிலால் பருவா; ஜிபன் ராம் பூகன் ஆகியோர், அவரை அடிக்கடி பார்க்க வருவார்கள். கௌகாத்தில், அவர் தினமும் உடற்பயிற்சி செய்வது வழக்கம். உடற்பயிற்சியின் நன்மை பற்றி அவர் ஒரு புத்தகத்தில் கூறுகிறார். ''உடலுறுப்புக்களைக் கொஞ்சம் கூட உபயோகிக்கவில்லையென்றால் அவனது உடலும் மனமும், வெளுத்து சீக்கிரம் பலஹீனமடைந்துவிடும். ஆகையால் மன உழைப்பு செய்பவர்கள் உடற்பயிற்சியும் செய்வதவசியம்.''[1] இருப்பினும் பிற்காலத்தில் கில்வாதம் அவரைப் பற்றிக் கொண்டது.

குழந்தைகளை நேசித்தார் ஹேமசந்திரர். தனது பங்களாவின் தோட்டத்தில் குழந்தைகளை விளையாட அனுமதித்தார். தனது அன்புக்குப் பாத்திரமான நண்பர் அபோய சங்கர குகா என்பவரிடம் குழந்தைகளுக்கு உடற்பயிற்சி கற்றுத்தர வேண்டினார். அவரிடம் ஆங்கிலம் படிக்கும் மாணவர்கள், சில நேரங்களில், தோட்டத்தில் களைபறிக்க கேட்டுக்கொள்ளப் படுவார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், அவர் இருந்த பகுதியில் உள்ள குழந்தைகளுக்கு இனிப்பு வழங்குவார்.

---

[1] பாத் - மாலா, எச். ஸி. பருவா, பக்கம் 38.

நாள் செல்லச் செல்ல கீல்வாதம் முற்றிவிட்டது. அதன் விளைவாக தனது 61 வயதில், 1896-ஆம் ஆண்டு மே மாதம் 17-ந் தேதி உயிர் நீத்தார்.

ஹேமசந்திரரின் மரணம் காட்டுத் தீ போல் பரவியது. எல்லாப் பிரிவு மக்களும், தங்களது கடைசி மரியாதையைச் செலுத்த அவரது இல்லத்திற்கு வந்தனர். அப்போது தான் ஈமச் சடங்குகள் பற்றிய சர்ச்சை எழுந்தது. தங்களது ஈமச் சடங்குகள் பற்றி மக்களின் எண்ணங்கள் விநோதமானது. ஜார்ஜ் மெரிடித் தனது உயிலில் கூறுகிறார் ''எனது உடலை எரித்துச் சாம்பலை எங்கெல்லாம் பொருளற்றச் சடங்குகள் உள்ளனவோ: அங்கெல்லாம் தூவுங்கள்''. வேர்தி தனது ஈமச் சடங்கு பற்றிக் கூறுகிறார் ''ஒரு எளிமையான ஈமச் சடங்கு சூரிய உதய நேரத்திலோ, அல்லது அஸ்தமனத்திலோ நடக்கட்டும். படோடோபம் வேண்டாம். பாடல்களோ, இசையோ வேண்டாம்.''

அதே போல ஹேமசந்திரரின் ஈமச் சடங்கு பற்றிய குறிப்பு ஒன்றுஅவரது அலமாரியில்கிடைத்தது. அதில் அவர் கூறுகிறார். ''உயிரில்லாத உடல், ஒரு மரத்திற்குச் சமம்.'' ஆகையால் வீணுக நேரத்தையும், உழைப்பையும், பணத்தையும் விரயமாக்காதீர்கள். உடலைப் புதைப்பது தவறு.அதனால் அக்கம் பக்கத்தில் உள்ள மக்களின் ஆரோக்கியம் கெட்டுவிடும். தண்ணீரில் தூக்கி எறிந்தால் மக்கள் அருந்தும் தண்ணீர் கெட்டுவிடும். ஆகையால் மக்கள் வசிக்காத ஒரு இடத்திற்கு என் உடலை ஒரு மாட்டு வண்டியில் எடுத்துச்சென்று, அங்கு எறிந்து விடுங்கள். ஆனுல் மக்கள் அவர் விருப்பப்படிச் செய்ய விழைய வில்லை. அவருடைய உற்ற நண்பரான மாணிக்சந்திர பரூவா, தொன்று தொட்ட பழக்க வழக்கங்களின்படிதான் ஈமச்சடங்குகள் நடக்க வேண்டுமெனக் கூறினார். அதை எல்லோரும் ஆதரித்தனர்.

பூனைக்கு மணி கட்டுவது யார்? பாடையைத் தூக்கிச் செல்பவர்கள் யார்? வைதிக மரபுகளைக் கடைப்பிடிக்கும் அந்தணர்களைப் பொறுத்த வரையில், ஹேமசந்திரர் அந்தணரில்லை. ஏனெனில் அவர் அந்தணரின் சட்ட திட்டங்களைச் சரியாகப் பின்பற்றவில்லை. மேலும் சமூக ஏற்றத் தாழ்வுகளை அகற்ற வேண்டும் என்பதே அவர் குறிக்கோள்.

இச்சமயத்தில் சில வங்க இளைஞர்கள் தங்களது உழைப்பைத் தர முன் வந்தனர். இது அப்போது நிலவிய

நெருக்கடி நிலையைச் சீர் செய்தது. சில அஸ்ஸாமிய இளைஞர்களிடமும் நல்லெண்ணம் தோன்றியது. அவர்கள் ஹேமசந்திரரின் உடலை நவக்கிரக இடுகாட்டிற்கு எடுத்துச் சென்றனர். அங்கே அவர் உடல் தகனம் செய்யப்பட்டது.

ஹேமசந்திரரின் பங்களா, இன்றைய இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் ஒரு சாதனமாக அங்கு இல்லை. அங்கு ஒரு மூலையில் அத்தாட்சியாக ஒரு சாசனம் உள்ளது அதில் ''அஸ்ஸாமிய சாகித்யார்த்தி ஹேமசந்திர பருவா'' வின் நினைவில் அஸ்ஸாம் சாகித்திய சபா இந்த அத்தாட்சியை அவர் கடைசியாக வாழ்ந்த இல்லத்தில் நிறுவியுள்ளது, (1864 சாகா)'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளித் தோற்றத்தில் ஹேமசந்திரர் உயரமாகவும் பருமனாகவும், இருப்பார். முகத்தில் ஒரு களை உண்டு. அகல நெற்றி, ஒளி பொருந்திய கண்கள், மென்மையான கன்னங்கள்; அழகான தாடி, இவையனைத்தையும், உள்ளத்தின் விழிப்புக்கும் தீவிர உறுதிக்கும் ஒரு சான்று போல அமைந்திருந்தன.

இரும்பு போன்ற மன உறுதி, தீவிர எண்ணம், ஊக்கம், விடாமுயற்சி போன்றவை எதனைக் கற்றுக்கொள்ளவும் அவசியம். ஹேம சந்திரரின் வாழ்க்கை நமக்கு இதை வலியுறுத்துகிறது. பள்ளிப்படிப்பு இல்லாமல் அவரால் பல மொழிகளைக் கற்க முடிந்தது. அஸ்ஸாமிய மொழி, மற்றும் இலக்கியத்தின் முடிசூடா மன்னன் என்ற மாலைகளைப் பெற முடிந்தது.

அவர் காலத்தில் அஸ்ஸாமில் ஆங்கிலத்தில் நல்ல ஆதிக்கம் பெற்ற ஒரு சிலரில் ஹேமசந்திரரும் ஒருவர். அவருடைய ஒரே ஆங்கிலப் புத்தகமான ''அஸ்ஸாமிய மக்களின் திருமண முறைகள் பற்றிய குறிப்புகள்'' (Notes on the marriage systems of the people of Assam) அதை ஊர்ஜிதம் செய்யும். அம்மாகாணத்தின் மூலை முடுக்களிலிருந்தெல்லாம் மக்கள், தங்கள் வேண்டுகோளை ஆங்கிலத்தில் எழுத, ஹேமசந்திரரிடம் வருவதுண்டு. வடமொழியில் புலமை பெற்றவர் அஸ்ஸாம் முதன்மைக் கமிஷனர் **ஸ்டீவர்டு பெய்லி** என்பவருக்கு அளித்த பொது வரவேற்பில் அவரே எழுதிய வடமொழிக் கவிதை ஒன்றைப் படித்தார். மக்களால் புகழப்பட்டது அக்கவிதை. பல முக்கிய மாணவர்கள் அக்கவிதையை மனப்பாடம் செய்து கொண்டனர். பண்டித ரமாபாய்

முதன் முதலாக அஸ்ஸாம் வந்தபோது வடமொழியில் மற்றொரு கவிதையைப் படித்தார் ஹேமசந்திரர். அதற்கான மறுமொழியை வடமொழிக் கவிதையாகவே தெரிவித்தார், பண்டித ரமாபாய்.

பழைய வடமொழிச் சுவடிகளைச் சேர்க்க, ராஜ ரஜேந்திர லால் மித்ரா, அஸ்ஸாம் வந்தபோது அவருடைய தொடர்பு ஹேமசந்திரருக்குக் கிட்டியது. மேற்கூறியவை ஹேம சந்திரர் ஒரு சிறந்த அறிவாளி என்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறும். ஏனெனில் நல்ல அறிவாளிகளுக்குக் கஷ்டத்தை மேற்கொள்ளும் தகுதியும் உண்டு.

எதிலும் காலம் தவறாதவர். நேரத்தை வீணாகச் சில வழிக்க மாட்டார். சிப்சாகரில் இருந்தபோது காலையிலும், மாலையிலும், ஒரு குறிப்பிட்ட நேரத்தை படிப்பதற்காகவே ஒதுக்கிவைத்திருந்தார். நேரத்தின் அவசியத்தை நன்கு உணர்ந்தவர். எல்லா இன்பங்களுக்கும் நேரமே வித்து என எண்ணினார். கௌகாத்தியில் ஒரு கூட்டத்திற்கு அவர் அழைக்கப் பட்டிருந்தார். குறித்த நேரத்தில் கூட்டம் நடைபெறவிருந்த இடத்திற்குச் சென்றார். அங்கு ஏற்பாடுகள் ஒன்றும் முடியாத காரணத்தால், வெறுத்து ''நேரத்தை வீணாக்குவது சரியில்லை'' எனக் கூறி வெளியேறிவிட்டார். நேரத்தின் மதிப்பை அவர் நன்கு உணர்ந்திருந்தபடியால்தான், மிக எளிமையாகத் தனது வாழ்க்கையைத் துவக்கிய போதிலும். பெரும் புகழ் அடைந்தார். சிக்கனம் அவரது சிறந்த குணங்களில் ஒன்று. அதற்காக, சிலர் இவரைக் கருமி என்று கூறியதும் உண்டு. அன்றாடச் செலவுகளைக் குறித்து வைத்துக் கொள்வார். எதையும் வீணாக்குவது அவருக்குப் பிடிக்காத விஷயம். தனது சமையல்காரரிடம் கூட, உணவைச் சரியாக, அளவோடு பரிமாறும்படி கூறுவார். சிக்கனமாக இருந்ததால் தான், அவரால் ரூ. 8000/- சேர்க்க முடிந்தது. அக்கால கட்டத்தில், அது ஒரு பெரிய தொகையே!

தனது மனசாட்சிப்படிதான் நடப்பார். மற்றவர்கள் அவர் செய்கையை விரும்புகிறார்களோ, இல்லையோ, அது பற்றி அவர் கவலை கொள்வதே இல்லை. அதன் வழிகளில் மிகவும் கண்டிப்பானவர். பழைய நம்பிக்கைகளைக் கடைப் பிடிக்கும் சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்த போதிலும் அச் சமூகத்தின் ஏமாற்றல், பாசாங்கு ஆகியவற்றை வெறுத்தார். பெரிய மனிதர்கள் எனக் கூறிக்கொள்வோரின் தவறுகளைச் சுட்டிக் காட்டத் தவறியதில்லை. தனது எழுத்துக்களில் அவர்

117428
14.12.04

களை எள்ளி நகையாடினர். அவரை ஒரு சமூக சீர்திருத்தவாதி எனக் கூறலாம். 19-ஆம் நூற்றாண்டில் வங்கத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய ராஜாராம் மோகன்ராய், ஈஸ்வர சந்திர வித்யா சாகர் ஆகியோரின் தாக்கமும் அவருக்கு ஏற்பட்டது.

மேற்கத்திய ஆடை பழக்க வழக்கங்களைப் பின்பற்றினார். அவர் ஒரு அந்தணராக இருந்த போதிலும், அவரது உணவு ஒரு அந்தணரல்லாதவரால் தான் தயாரிக்கப்பட்டது. ஹிந்து மதத்தின் பழைய பழக்க வழக்கங்களையும், மூடநம்பிக்கை களையும் களைத்தெறிந்து, நவீன முறையில் சமூகச் சீர்திருத்தம் செய்வதே அவரது முயற்சியாக இருந்தது.

ஹேமசந்திரர், குணபிராம் பரூவா (1837-94) கமலா காந்த பட்டாச்சார்ய (1857-1936) ஆகிய மூவரும் சமூகப் புரட்சியாளர்கள் எனக் கூறலாம். அக்கால கட்டத்தில், அஸ்ஸா மில் பழைய பழக்க வழக்கங்களும், மூட நம்பிக்கைகளும், நிறைந்த சமூகத்திற்கு எதிரான புதிய எண்ணங்களை உருவாக் கியவர்கள், இவர்கள்தான் எனலாம்.

ஹேமசந்திரர் சிறந்த தேசாபிமானி. அஸ்ஸாமிய மொழி அரசாங்க ஆதரவை இழந்துவந்த நேரம் அது. அஸ்ஸாமிய மொழி வங்க மொழியின் திசைமொழி, என்ற ஒரு கருத்தும் இருந்தது. அந்தக் காலகட்டத்தில் அஸ்ஸாமிய மொழியைக் காப்பதில் மிகுந்த கவனத்துடன் இருந்தார், ஹேமசந்திரர்.

தன்னலமற்ற உழைப்பாளி, விளம்பரம் விரும்பாதவர், ஹேமசந்திரர். தன்னைப் புகைப்படம் எடுப்பதைக் கூட வெறுத்தார். அவருடைய நண்பர், அவருக்குத் தெரியாமல் புகைப்படம் எடுத்து விட்டார். அந்தப் படத்தை அவர் ஹேமசந்திரரிடம் காண்பித்தார். கோபத்தில் முகம் சிவந் தது. புகைப்படத்தைக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டார். அங்கிருந்து ஹேமசந்திரர் சென்ற பிறகு, அவரது நண்பர், கிழித்த அந்த புகைப் படத்தை குப்பைத் தொட்டியிலிருந்து எடுத்துக்கொண்டு, அங்கிருந்து சென்றார். பிறகு அவற்றை ஒன்றாக ஒட்டினார். அதிர்ஷ்ட வசமாக, அந்தப் புகைப்படம் ஒன்று தான் இப்போது கிடைக்கிறது.[1]

தனது பெயரை எழுதும் போதும், கையொப்பம் இடும் போதும், ஆங்கிலத்தில் ''ஹேம் சந்தர் பரூவா'' அஸ்ஸாமி

---

1 ஹேமசந்திர பரூவா, ஏ. ஹசாரிகா, பிரகாஷ், பக்கம் 13.

யில் ''ஹேமசந்திர பருவா'' என்றும் அவர் குறிப்பிடுவது வழக்கம். மேற்கத்திய நடைமுறைகளைப் பின்பற்றியதால் ஆங்கிலப் பெயரை அப்படி எழுதினார் போலும். அவரது புனைபெயர் ''சோனர் சந்த்'' (தங்க நிலா). ஹேமசந்தர் என்ற பெயரில் சில நேரங்களில் கட்டுரைகள் எழுதுவதுண்டு.

தனது நரம்புத் தளர்ச்சியால் ஏற்படும் வலியை மறைக்க **தாமஸ் டி. குவின்ஸி**, அபினி அருந்தியதுபோல் தனது தீர்வாத வலியை மறக்க ஹேமசந்திரர் மதுவின் அடிமையானார்; என்றாலும் ஒருபோதும் நிலை தடுமாறியதில்லை.

யாராவது, அவரது மதப்பற்று பற்றிக் கேட்டால் அவர் கூறுவார். ''நான் ஒரு உலோகாயவாதி. அதாவது காணாப் பொருளை அறிய முடியாது என்பது என் கருத்து. இந்து மத சாங்கிய தத்துவத்தில் கடவுள் நம்பிக்கைப் பற்றிக் குறிப்பிடவில்லை''.[1] ஹேமசந்திரரைப் பொறுத்த வரையில் மதமும் நீதி நூல்களும் ஒன்றே. இருப்பினும் அவருக்கு அமானுஷ்ய சக்தியின் பால் நம்பிக்கை இருந்தது என்பது அவரது எழுத்துக்கள் மூலம் தெரிய வருகிறது. ராஜாராம் மோகன் ராய் என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையில் ''ராஜா ராம் மோகன் ராய் பிரம்ம சமாஜத்தை ஏற்படுத்தியதே ஒரே அமானுஷ்ய சக்தியை வணங்குவதற்கு வழி கோலத்தான்''[2] என்று கூறுகிறார். அதே புத்தகத்தில் மற்றொரு கட்டுரையில், ''மூலமுதலான காரணங்களிலிருந்து வெளிவந்த இந்த உலகமே கடவுள் என அழைக்கப்படுகிறது'' எனக் கூறுகிறார்.[3]

கௌகாத்தியில் இருந்த பிரமுகர்களில் மிகவும் மரியாதைக் குரியவராக இருந்தவர் ஹேமசந்திரர். அவருடைய சமூகச் சீர்திருத்த உத்வேகம் சிலருக்குப் பிடிக்கவில்லை. குறிப்பாகப் பழமை விரும்பிகளுக்குப் பிடிக்கவில்லை. தனது சொந்த முயற்சியால் பல சமூகச் சிக்கல்களை பல நேரங்களில் சீர் செய்திருக்கிறார். மேற்கத்திய நடைமுறையைப் பின்பற்றிய மாணிக் சந்திர பருவாவுக்கு, தனது மகளைத் திருமணம் செய்து தர, லக்ஷ்மிலால் பருவா, மறுத்தபோது, ஹேமசந்திரர் இருவரிடமும் பேசி அத்திருமணத்தை நடத்திவைத்தார்.

1893-ஆம் ஆண்டு இந்திய அபினி ஆணையம் அவரை சாட்சியம் சொல்லும்படி அழைத்தது. கல்கத்தா செல்ல இயலாததால், தனது கருத்தை எழுதியனுப்பினார்.

---

1 கனக்லால் பருவா ரசனாவளி என். தாலுக்தர், பக்கம் 59.

2 பாத்-மாலா எச்.சி. பருவா, பக்கம் 80.

3 முன்னது பக்கம் 20.

அதில் ஹேமசந்திரர் கூறுகிறார் :

''அஸ்ஸாமிய மக்கள், அபினை, மருந்து அற்ற பயன்களுக்கு, உபயோகப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளனர். ஆகையால் அதனை தடுப்பதற்கான செலவை அவர்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏற்றுக்கொள்ள அவர்களுக்குச் சக்தியும் இல்லை''

''கத்தியை விட பேனா சிறந்தது'' என்பது பழமொழி. எழுத்தர் வேலையில் சேர்ந்த ஹேமசந்திரரின் பேனா, பல அதிசயங்களைச் செய்தது. அவரது எழுத்துக்கள் பல தடங்கல்களை அப்புறப்படுத்தியது மட்டுமல்லாமல் அஸ்ஸாமிய இலக்கியத்திற்குச் சிறந்த அடித்தளம் அமைத்துக் கொடுத்தது.

# 3. சமூக சீர்திருத்தவாதி

ஹேமசந்திரர் முன்னேற்றக் கருத்துக்களைக் கொண்டவர். வங்கத்தைச் சேர்ந்த ராஜாராம் மோகன்ராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், போன்றோரின் தாக்கத்தை அவரிடம் காண முடிந்தது. அக்கால கட்டத்தில் அஸ்ஸாமிலும், வங்காளத்திலும், செய்தித் தாள்களும், சஞ்சிகைகளுமே, எண்ணங்களையும், குறிக்கோள்களையும் பிரதிபலிக்கும் கருவிகளாக இருந்தன. பெரிய மனிதர்கள், அறிவாளிகள் யாவரும், வங்கத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை இந்த நாளிதழ்களின் மூலமாகவே அறிந்து கொண்டனர்.[1] அதேபோல அஸ்ஸாம் நிகழ்ச்சிகள் அனைத்தும் வங்க நாளிதழ்களில் வெளிவந்தன. அஸ்ஸாமின் மூலை, முடுக்குகளிலெல்லாம், **சமாசார் தர்பன் சமாசார் சந்திரிகா, மாலிக் பத்திரிக்கா**, போன்ற பத்திரிகைகள் கிடைத்தன. செய்தித் தாளின் வளர்ச்சி, தண்ணீர் மார்க்கமாகப் போக்குவரத்தின் வளர்ச்சி—ஆகியவை, வங்கத்தையும், அஸ்ஸாமையும் அருகில் கொண்டுவந்தன.

1846-இல் அமெரிக்க பாப்டிஸ்ட் மிஷன் துவக்கிய முதல் அஸ்ஸாமிய மாதப் பத்திரிகை **ஒரு நோடாய்**, அஸ்ஸாம் பற்றியச் செய்திகளை வெளியிட உதவியாய் இருந்தது. ஆனால் அந்தப் பத்திரிகை பொதுவாக மதம், மற்றும் வகுப்பு வாதம் பற்றியக் கருத்துக்களையே வெளியிட்டது.

மேற்கத்திய நாடுகளின் தாக்கம், தொன்று தொட்டு வந்த நம்பிக்கைள், நடைமுறைகள், மற்றும் சம்பிரதாயங்களை நடைமுறை நியாயம் என்ற பார்வையில் மாற்றி அமைத்தன.[2] புராதன நம்பிக்கைகளைக் கண்டிப்பாகக் கடைபிடிக்கும் பழக்கம் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்த்தப்பட்டது. அஸ்ஸாமின் உயர்குடி பிறந்தோர் 'பாபு' என்றே அழைக்கப்பட்டனர். அஸ்ஸாமிய மக்களின் வாழ்க்கை, கலாச்சாரம், உடை மற்றும் உணவு முறைகளில் வங்கத்தின் தாக்கத்தைக் காண முடிந்தது. 19-ஆம் நூற்றாண்டு, தனிமையை உடைத்தது எனக் கூறலாம்.

---

1 அஸ்ஸாமிய புத்திஜீவி ஹேமசந்திர பருவா
ஆர். டி. கோஸ்வாமி, பிரகாஷ், பக்கம் 62.

2 பொலிடிகல் ஹிஸ்டரி ஆப் அஸ்ஸாம் எச்.கே. போர்பூசாரி, பக்கம் 127.

ஆங்கிலம் படைத்த இளைஞர்களான ஆனந்தராம் தீக்கி யால் பூக்கன்; குணபிராம் பருவா; மற்றும் ஹேமசந்திரர் மேற்கத்திய கலாச்சாரத்தால் இழுக்கப்பட்டனர்.

ராஜாராம் மோகன்ராயின் எண்ணங்களை, கொள்கை களை மனத்தில் வைத்துப் போற்றினார் ஹேமசந்திரர். இருப் பினும் பண்டிட் ஈஸ்வர சந்திர வித்யாசாகரின் அடிச்சுவட்டைப் பின்பற்றினார். பண்டிட் வித்யாசாகருக்கும் ஹேமசந்திரருக் கும் பல விஷயங்களில் ஒற்றுமை இருந்தது. இருவரும் அந்த ணர்கள். வடமொழியில் வல்லுநர்கள். சமூகக் கொடுமை களை அழிக்கவும், நவீன முறையில் சீர்திருத்தம் செய்யவும் விரும்பினார்கள். இருவரும் விதவை மறுமணத்தை ஆதரித்தார் கள். இருப்பினும், ஹேமசந்திரரின் பகுத்தறிவு இரண்டாவது முறை திருமணம் செய்துகொள்ள இடம் தரவில்லை. ஹிந்து விதவா மறுமணத்தை ஆதரித்ததோடு அல்லாமல் வித்யாசாகர் தன் குடும்பத்திலேயே மறுமணம் செய்து எல்லோருக்கும் முன்னோடியாக விளங்கினார். ஹேமசந்திரரைப் பொறுத்த வரையில் வித்யாசாகர் மிகவும் மதிப்புக்குரியவர்.

தனது சுய சரிதையில் கூறுகிறார்: மதிப்பிற்குரிய வித்யா சாகர் விதவை மறுமணம் இந்துமத நூல்களில் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம் என்று கூறுவதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை. தனது மகனுக்கு ஒரு விதவையைத் திருமணம் செய்து வைத்தார். காலம் அவரை ஆட்கொண்டு விட்டது. ஆனால் அவர் விட்டுச்சென்ற அடிச்சுவடுகள் என்றும் அழியா தது; அழிக்க முடியாதது. அவர் அடிச்சுவட்டை பின்பற்றுவர் இந் நாட்டில் 'எப்போது' இருப்பார்கள்? 'எப்போது' என்று எதிரொலிக்கிறது.[1]

பலதார மணத்தை ஹேமசந்திரர் எதிர்த்தார். அதற்கு எதிராகத் தனது வாதத்தைக் கூறுகையில் ''நமது சமுதாயம் உள்ள நிலையில் மனைவி இறந்த பிறகு மறுமணம் செய்து கொள்வதென்பது கண்டிக்கத்தக்கது. என் மனைவி இறக்காமல் நான் இறந்திருந்தால் அவள் நிலை என்ன என்பதை எண்ணும் போது நான் ஆச்சரியமடைகிறேன். அவள் இறந்துவிட்டாள்: நான் நினைத்தால், ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்றல்ல, தேவை போல் திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் ஒரு விதவை அதுபோல் ஓர் எண்ணத்தைக் கூறினாலே அவள் சாதியி

1 அஸ்ஸாமிய பாசார் ஒஜா ஹேமசந்திர பருவா. ஜெ. என். கோஸ்வாமி, பக்கம் 68.

லிருந்து விலக்கப்படுகிறாள். சமூகம் அவளுக்குத் தீங்கிழைக்கிறது. உயிருள்ள போதே அவள் மடிந்துவிடுகிறாள். இது சரியானதென்று. நியாயமற்றது. ஆகையால் மறுபடியும் மணம் செய்து கொள்வதென்பது சரியன்று''[1] எனக் கூறுகிறார். ஒரு நோடாய் (1856), என்ற பத்திரிகைக்கு எழுதிய கட்டுரை ஒன்றில் பலதார மணத்தைச் சாடியிருக்கிறார். தனது மனைவியின் மறைவுக்குப் பிறகு 30 வருடம் தனிமையில் வாழ்ந்திருக்கிறார் ஹேமசந்திரர். அப்போது தனது நேரம் முழுவதையும், படிப்பதற்கும், எழுதுவதற்குமே செலவிட்டார்.

அக்கால கட்டத்தில் அஸ்ஸாமில் பெண் கல்வி புறக்கணிக்கப்பட்டது. 1854-இல் வெளிவந்த ''உட்ஸ் டெஸ்பாட்ச்'' சைப் பின்பற்றி முதன்முதலில் பெண்களுக்கென ஒரு அரசாங்க பிரைமரிப்பள்ளி 1860-61-இல் சிப்சாகரில் துவக்கப்பட்டது. ''உட்ஸ் டெஸ்பாட்ச்'' பெண்கல்விக்கு முதன்மை கொடுத்தது. அதற்குப் பிறகு நவ்காங்கிலும் கௌகாத்தியிலும் அதுபோல் பள்ளிகள் துவக்கப்பட்டன. பெண்களுக்காக ஹேமசந்திரர் அரும்பாடு பட்டார்.

''பெண்களுக்கு சாதகமற்ற தவறான எண்ணங்களை விட்டொழித்து, அவர்களுக்குக் கல்வி அளித்து உங்கள் வாழ்க்கையில் ஒரு பங்காளராக ஆக்குங்கள். அவர்கள் உங்கள் உடலின் ஒரு பகுதி மட்டுமல்ல; உரிய நண்பர்கள்''.[2]

ஆனந்தராம் தீக்கியால் பூக்கனைப்[3] பற்றிய சரிதை நூலில், ஹேமசந்திரர் ''இளைய வங்கம்'' பற்றி கூறுகிறார். அதுபற்றி ஒரு **நோடாய்** (1861),[4] பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதினார்.

''இளைய வங்கத்தின் நற்குணங்களை ஆர்வத்துடன் சில அஸ்ஸாமிய இளைஞர்கள் பின்பற்றுவது குறித்து மகிழ்ச்சி அடைந்தார் பூக்கன். அக்கட்டுரையிலிருந்து இளையவங்கத்தின் செய்கைகள் குறித்து ஹேமசந்திரருக்கு அவ்வளவு நல்ல கருத்து இல்லை என்பது புலனாகிறது.

''ஹிந்து பாட்டிரய்ட்'' [1861]-இல் வெளிவந்த கட்டுரையின் சில பகுதிகளின் மொழிபெயர்ப்பே அந்தக் கட்டுரை. இளைய வங்கத்தின் குறைகளை வெளிப்படுத்த எழுதியதே.

---

1 ஹேமசந்திர பருவா ஜீவன் சாரில், எஸ், கடகி, பக்கம் 103,

2 ஒரு நோடாய் தால்பத், பி. கே. பருவா-பக்கம் 122.

3 பாத்-மாலா, எச். சி. பருவா பக்கம் 82-88.

4 ஒரு நோடாய் தால்பத், பி. கே. பருவா பக்கம் 122.

ராஜாராம் மோகன்ராய் துவக்கிய மறுமலர்ச்சி இயக்கம், வங்க இளைஞர்களின் கையில் பழமையை எதிர்க்கும் ஒரு இயக்கமாக மாறியது என்பது குறிப்பிடத்தக்கது. அந்த இயக்கத்தின் தலைவர் ஹென்றி விலியன் டெரோஸியா (1809-31 A.D.) மாணவர்களின் பண்பைக் குறைக்கும் வகையில் நடந்துகொண்டார் என்பதற்காக, இந்துக் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டார். என்றாலும், அவரைப் பின்பற்றி கிருஷ்ணமோகன் பண்டோபாத்யாய், "தி என்குயரர்" என்ற பத்திரிகை வெளியிட்டு, இந்த இயக்கத்தை மேலும் தீவிரப் படுத்தினார்.

ராஜாராம் மோகன்ராயின் தாக்கம், ஹேமசந்திரருக்கு இருந்தபோதிலும், பிரம்ம சமாஜத்தின் உறுப்பினராக வேண்டும் என்ற எண்ணம், ஹேமசந்திரருக்குக் கிடையாது. அப்போது, பிரம்ம சமாஜக் கொள்கைகளைப் பரப்பும் பிரசாரகர்கள்,வங்கத்திலிருந்து அஸ்ஸாம் வந்தனர். கல்கத்தாவில் கல்வி கற்ற குணபிராம் பருவா, பிரம்ம சமாஜத்தினரால் நடத்தப்பட்ட பல விழாக்களில் கலந்துகொண்டார். 1869-ஆம் ஆண்டு பிரம்மசமாஜத்தின் உறுப்பினர் ஆனார்.

எண்ணம், செயல், திட நம்பிக்கை, பண்பு, ஆகியவற்றைக் கொண்டு பார்க்கையில், ஹேமசந்திரர், முழுக்க முழுக்க ஒரு சமூகச் சீர்திருத்தவாதியே. அவர் வாழ்ந்த காலத்தை நாம் கருத்தில் கொண்டால், இது நன்கு புலப்படும்.

பழைய தலைமுறையின் விவேகம்; மற்றும் பின்னால் வரக்கூடிய விஷயங்கள் குறித்த, தீர்க்க தரிசனம் ஆகியவற்றை இணைத்துத் தன்னுள் வைத்திருந்தார் எனக் கூறலாம்.[1]

[1] டிக்ஷனரி ஆப் நேஷனல் பையாகிராபி, வால்யூம் I, பக்கம் 144.

# 4. அஸ்ஸாமிய மொழியின் அறிமுகம்: ஹேமசந்திரரின் பங்கு

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ்வந்த கடைசி மாநிலம் அஸ்ஸாம் மாநிலம்தான். பயங்கரமான கொடுமைகளைச் செய்த பர்மியர் நாட்டை விட்டுச் சென்றபின், அஸ்ஸாமிய மக்களுக்கு, தங்கள் உயிர், உடமை, பாதுகாப்பு குறித்து ஒரு நம்பிக்கை வளர்ந்தது. 1826-ஆம் ஆண்டு, ஆங்கில அரசாங்கம் அஸ்ஸாம் மாகாணத்தைத் தனதாட்சிக்குட்படுத்திக் கொண்டது. அரசாங்க வேலைகளில் அஸ்ஸாமிய மொழியைப் பயன்படுத்தியது. சிறிது காலத்துக்குப் பிறகு, அண்டை மாநிலமான வங்கத்திலிருந்து தனது வேலையாட்களை அரசாங்கம் தேர்ந்தெடுத்தது. தேர்ந்தெடுத்த அந்த உதவியாளர்கள், அஸ்ஸாமிய மொழி, வங்கமொழியின் ஒரு பிரிவே என்ற கருத்தை அரசுக்கு வலியுறுத்தினர். அவர்களின் கூற்றைக் கருத்தில் கொண்டு, ஆங்கில அரசாங்கம் ஒரு முடிவுக்கு வந்தது. ஒரு அரசு ஆணையையும் வெளியிட்டது. அதன்படி பள்ளிகளிலும் நீதித் துறையிலும் அஸ்ஸாமிய மொழியின் இடத்தை வங்கமொழி பெற்றுக்கொண்டது. இதன் காரணமாக தாய் மொழியில் கல்வி கற்கும் வாய்ப்பை அஸ்ஸாமியர்கள் இழந்தனர். அஸ்ஸாமிய மொழியை, மறுபடியும், அதன் இடத்தில் நிலைநிறுத்த ஒரு நீண்ட போராட்டமே நடந்தது.

மேற்கத்தியக் கல்வி தேவை என்ற எண்ணம் கொண்டவரும், இன்றைய தலைமுறையின் பிரதிநிதியுமான ஆனந்தராம் தீக்கியால் பூக்கன் தான் முதன்முதலில் அஸ்ஸாமிய மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தினார். அப்போது மக்களிடத்து ஒருவித உணர்ச்சியின்மை இருந்தது. பள்ளிகளிலும் நீதித் துறையிலும், வங்கமொழி ஆக்கிரமிப்பை எதிர்த்துக் குரல் கொடுத்தவர் ஆனந்தராம் தீக்கியால் பூக்கன். பள்ளிகளிலும் நீதித்துறையிலும், அஸ்ஸாமிய மொழி, வங்க மொழியின் இடத்தை அடைய வேண்டும் எனக் குரல் கொடுத்தார்.

ஆசிரியர் பெயர் குறிப்பிடாமல் எழுதப்பட்ட தனது வெளியீடான ''அஸ்ஸாமிய மொழி பற்றிய சில குறிப்புகளும் அஸ்ஸாமில் தாய் மொழிக் கல்வியும்'' (1855) என்ற

நூலில் அஸ்ஸாமிய மொழி ஒரு **வளமான** மொழியாக இருக்க வேண்டும் என்பதற்கான கருத்துக்களை நன்கு விவரித்துள்ளார். 1953-இல் தானாகவே ''அஸ்ஸாம் மாகாண அரசாட்சி பற்றி சில கருத்துக்கள்'' என்ற நூலை நிசாமத்அதாயத் மற்றும் சுத்தர் திவானியின் நீதிபதியான ஏ.ஜெ. மோபட் மில்ஸ் என்பவரிடம் அளித்தார். இந்தக் கருத்துக்களை மோபட் மில்ஸ், அஸ்ஸாம் மாகாணம் பற்றிய தனது அறிக்கையில் (1854) சேர்த்துக்கொண்டார்.

அஸ்ஸாமில், அஸ்ஸாமிய மொழியைப் புனர் நிர்மாணம் செய்யவேண்டும் என்ற பூகனின் யோசனையை மில்ஸ் ஒப்புக் கொண்டார். ஆனால் துரதிருஷ்டவசமாகப் புனர் நிர்மாணம் செய்த பிறகு அதைப் பார்க்கப் பூகன் இல்லை. மிக இளவயதிலேயே அவர் இறந்துவிட்டார். நவ்காங்கில் உள்ள 216, படித்த அஸ்ஸாமியர்கள் 1872-ஆம் ஆண்டு மார்ச்சு 9-ந் தேதி கொடுத்த பொதுநிலை அறிக்கையிலிருந்து இக்கிளர்ச்சியை அமெரிக்கப் பாப்டிஸ்ட் மிஷன் நடத்தியது என்பதற்குச் சான்றுகள் உள. டாக்டர் மில்ஸ் பிரான்சன் என்பவர் இதன் தலைவர். தனது நண்பர்களான துாதிராம் பருவா, லக்ஷிமிலால் பருவா, பாலோராம் பூக்கன் ஆகியோரை மற்றவர்களுடன் சேர்ந்து, அரசாங்கத்திற்கு ஒரு பொதுநிலை அறிக்கை விடுமாறு மக்களை வேண்டினார்.

1867-இல், டாக்டர் பென்சனின் ''அஸ்ஸாமிய மற்றும் ஆங்கில அகராதி'' வெளிவந்தது. அந்தஅகராதியின் தரம்பற்றிக் குறைகூறினர் சிலர். முதலில் உள்ள 688 வார்த்தைகளில் 591 வார்த்தைகள் வங்கமொழிச் சொற்களே என்றனர். ஆகையால், அரசாங்கம் ஒரு பிரதியை அப்போது 24 **பர்கானா**வின் உதவி மாஜிஸ்ரேட்டும், **கலெக்ட**ருமான, ரமேஷ் சந்திரதத் என்பவருக்கு அனுப்பி அவரது கருத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டது. ரமேஷ் சந்திரதத்தின் கருத்துக்குப் பிறகு குறை கூறுவதை நிறுத்திக்கொண்டனர் பலர். கடைசியாக 1873-ஆம் ஆண்டு ஏப்ரல் 19-ந்தேதி வங்க துணைநிலை ஆளுநர் சர் ஜார்ஜ் காம்பெல், ஒரு உத்திரவைப் பிறப்பித்தார். அதன் படி, அஸ்ஸாமிலுள்ள பள்ளத்தாக்கு மாநிலங்களில், உள்ள பள்ளிகளிலும், நீதித்துறையிலும், அஸ்ஸாமியமொழி கொண்டு வரப்பட்டது.

அஸ்ஸாமிய மொழியைப் பள்ளிகளில் அறிமுகப்படுத்திய தால், பள்ளி மாணவர்களுக்குத் தேவையான பள்ளிப் புத்தகங்

களை அஸ்ஸாமிய மொழியில் எழுதவேண்டிய நிலை ஏற்பட்டது. அப்பொறுப்பு ஹேமசந்திரரிடம் ஒப்படைக்கப் பட்டது. அப்பணியில் அவரது பங்கு குறிப்பிடத்தக்கது.

ஹேமசந்திரரின் சீர்திருத்த எண்ணம் இலக்கியத்தின்பால் திரும்பியது. ஆரம்பகால தனது இலக்கியப் போக்கில், அஸ்ஸா மிய மொழியின் எழுத்திலக்கணம், மற்றும் எழுத்துக்கூட்டு முறையைச் சீர்த்திருத்தம் செய்ய விரும்பினார். அஸ்ஸாமிய எழுத்திலக்கணம், அமெரிக்க பாப்டிஸ்ட் மிஷனரிகள் உப யோகப்படுத்துவதுபோல, குறிப்பாக ஒரு **நோடாய்**, ஆசிரியர் உபயோகப் படுத்துவது போல அமையவேண்டும் என விரும்பினார். தனது சுய சரிதையில் ஹேமசந்திரர் கூறுகிறார்· "**ஒரு நோடாய்**, என்ற செய்தித்தாளுக்கு நான் வெகுகாலம் எழுதியிருக்கிறேன். அது ஒரு பாப்டிஸ்ட் மிஷன் பத்திரிகை ஆகும். தினமும் மிஷனரிகளைச் சந்திக்க நான் சென்ற கார ணத்தால், ஒரு **நோடாய்** பத்திரிகையுடன் எனது தொடர்பு ஸ்திரமாகிவிட்டது. நான் அஸ்ஸாமிய மொழியின் எழுத்திலக் கணத்தையும், எழுத்துக் கூட்டுமுறையையும் சீர் செய்ய முயற்சித்தேன். எனது இந்த முயற்சியில் இந்திய கிருஸ்துவரான **நிதி லெவி பேர்வெல்** என்பவரின் எதிர்ப்பை நான் சமாளிக்க வேண்டியிருந்தது. நிதி லெவி பேர்வெல், தனது ஆசிரியரான **பிரவுன் சாகேப்**.[1] பின் எழுத்திலக்கண முறையிலிருந்து சிறு மாற்றம் செய்வதுகூடப் பாவம் என்று எண்ணினார் என்றாலும் முடிவில் ஹேமசந்திரர் வெற்றி கண்டார். இருந்த போதிலும், பழைய அஸ்ஸாமிய எழுத்தான "வா" என்பதை மறுபடியும் புகுத்தச் சிறிதுகாலம் பிடித்தது. கௌகாத்திக்கு மாறிய பிறகு மதிப்பிற்குரிய டாக்டர் எம்.எஸ். கம்பர்ட் அவர்களின் உதவியால் இந்த எழுத்தை அவரால் உபயோகிக்க முடிந்தது. தினசரிப் பத்திரிகையான ஒரு **நோடாயில்** இலக்கணம் மற்றும் சொல்லிலக்கணத்தைவிட, வழக்கிலுள்ள பாஷையின் ஒலியும் நிறைந்திருந்தது. 1861–ஆம் ஆண்டு முதல், ஹேமசந்திரரின் முயற்சியில், அவர் கூறிய எழுத்திலக் கணம் மற்றும் எழுத்து கூட்டு முறையை இந்தப் பத்திரிகை பின்பற்றியது.[2]

இத்தோடு இது நின்றுவிடவில்லை. அஸ்ஸாமிய முதல் வகுப்புப் புத்தகமான **ஆதி பாத்** என்ற நூலை அச்சு செய்யும்

---

1 ஹேமசந்திர பருவா ஜீவன் சரித், எஸ். எஸ். கடோகி, பக்கம் 31.

2 டிக்ஷனரி ஆப் நேஷனல் பையாகிரபி, பக்கம் 144.

போது அரசாங்கத்திற்கு எதிராக, தனது குரலை எழுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. அரசாங்கத்திடமிருந்து ஹேம சந்திரருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் "வடமொழி எழுத் துக்களோடு, இப்போது "வா" என்று புதிதாக ஒரு எழுத்து சேர்க்கப்பட்டிருப்பது, தலைமைக் கமிஷனரின் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. விஞ்ஞான ரீதியாக ஒத்துக் கொள்ளப்பட்ட எழுத்துக்களோடு, புதிதாக எந்த எழுத்துக் களையும் சேர்க்க முதன்மை ஆணையர் ஒத்துக்கொள்ள முடியாது. இப்போது உள்ள வடமொழி எழுத்துக்களே போதுமானது என்று முதன்மை ஆணையர் கருதுகிறார்."[1]

தனது பதிலில் "யா" என்பதற்கு பதிலாக "வா" என் பதை ஏன் உபயோகிக்க வேண்டும் என்பதை ஆணித்தரமாக விளக்கிக் கூறினார், ஹேமசந்திரர். அப்போது, பள்ளி ஆய்வாளராக இருந்த ஸி. ஏ. மார்டின், அதை ஒத்துக்கொள்ள வில்லை. அத்தருணத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டார் ஹேமசந்திரர். அப்போது ஒரு பெரிய கடிதம் எழுதினார். அதில் "வடமொழியில் "வா" என்பதற்குச் சரியான எழுத்துக்கள் இல்லை எனக்கொள்வது தவறு. தேவநாகரி எழுத்தில் அறிமுகம் இல்லாதவர்களும், வடமொழியை வங்க எழுத்துக்களில் படிப்போரும் வடமொழியில் "வா" என்ற எழுத்து இருப்பதை அறிந்திருக்க நியாயமில்லை. காலஞ் சென்ற ராஜா ராதாகாந்த் பகதூரின், தேவநாகரி எழுத்தில் அச்சடிக்கப்பட்ட "சப்த கல்பதல்மா"வைப் பார்க்கவும். வில்சனின் வடமொழி அகராதியில் "வா" என்பது ஆங்கிலத் தில் உள்ள 'ய' போலவே உச்சரிப்பதைக் காணமுடியும்".

"மேலே கூறப்பட்டவைகளை நோக்குங்கால், அந்த எழுத் தானது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, அஸ்ஸாமியரால், வட மொழியில் சேர்க்கப்படவில்லை என்ற உண்மை ஊர்ஜிதம் ஆகும்." புதியதாக ஒட்டுப்போட்டதுதான் என்று கூறச் சரியான காரணங்கள் எதுவுமில்லை. ஏனெனில் மிகப்பழைய கையெழுத்துப் பிரதிகளில் இந்த எழுத்து உள்ளது.

மேலே கூறியவற்றிலிருந்து "வா" என்ற எழுத்து நமது உபயோகத்தில் தொன்றுதொட்டு வந்திருக்கிறது என்பது புலப்படும். சரியாக எழுதுவதற்கு அந்த எழுத்து மிகவும் அவசியம். அந்த எழுத்தை விட்டுவிட்டால், தொன்று தொட்டு

---

1 அஸ்ஸாமிய பாசார் ஒஜா, ஹேமசந்திர பருவா
ஜெ. என். கோஸ்வாமி, பக்கம் 189.

எழுதிவந்துள்ள முறை மாறும்; அதோடு மட்டுமல்லாமல், ஒலியையும் மாற்றிவிடும்.

அஸ்ஸாமிய மொழி எனது தாய்மொழி. சென்ற 18 ஆண்டுகளாக நான் அம்மொழியில் கவனம் செலுத்தியுள்ளேன். 4 அல்லது 5 புத்தகங்கள் எழுதியுள்ளேன். அவற்றில் ஒன்று இலக்கணப் புத்தகம். மேலும் எனக்கு வடமொழியிலும் நல்ல அறிமுகம் உண்டு. அஸ்ஸாமிய மொழியின் மூலம் வடமொழிதான் என்பதில் சந்தேகமில்லை. இப்படியிருக்கையில் நான் அழகான எளிய அஸ்ஸாமிய மொழி எழுத இயலவில்லை என்றாலும், கூடுமான வரையில் சரியாக எழுத வேண்டும் என்பது என் எண்ணம்.''[1]

அஸ்ஸாமிய மொழி மற்றும் இலக்கண வளர்ச்சிக்காகப் பாடுபட்டவரிடம் இருந்துவந்த கடிதமல்லவா? எளிமையான ஆனால் தைரியமான அக்கடிதம் தேவையான மாற்றத்தை ஏற்படுத்தியது. முடிவாக அஸ்ஸாம், முதன்மை ஆணையர் ''வா'' அந்த எழுத்தை உபயோகிக்கலாம் என்ற உத்திரவைப் பிறப்பித்தார். அஸ்ஸாமிய மொழி பல இன்னல்களைக் கடந்தது. அதை ஒரு பெரிய அழிவிலிருந்து காப்பாற்றினர் ஹேமசந்திரர், என்றால் அது மிகையாகாது.

---

[1] முன்னது பக்கம் 198-202.

# 5. எழுத்தாளர்களின் முன்னோடி

ஆனந்தராம் தீக்கியல் பூக்கன், ஹேமசந்திர பருவா, குணபிராம் பருவா ஆகியோரை, நவீன அஸ்ஸாமிய இலக்கியத்தின் தூண்கள் என்று அழைத்தால் அது மிகையாகாது. பள்ளிகளிலும் நீதித்துறையிலும், அஸ்ஸாமிய மொழியைத் திரும்ப இடம்பெறச் செய்ததில் ஆனந்தராமுக்குப் பெரும் பங்கு உண்டு. அவருடைய எழுத்துக்களால், நவீன அஸ்ஸாமிய உரைநடையில் ஏற்பட்ட மாற்றம் நன்கு தெரியும். அவற்றை ஒருமாதிரியாகக் கொள்ளலாம். அந்த நடைதான் இப்போது மெதுவாக வளர்ச்சியடைந்து வருகிறது. ஆங்கிலக் கல்வியின் நன்மைகளை அறிஞர்களின் கவனத்திற்குக் கொணர்ந்தார், பூக்கன்.[1]

மற்றொரு இலக்கியச் சிற்பியான குணபிராம் அஸ்ஸாமிய உரைநடையை முழுக்க முழுக்க இலக்கிய, மற்றும் தெளிவான சாதனமாக ஆக்கினார். ஹேமசந்திரரின் சம காலத்தவர் இவர், இவரது உரைநடை மிகவும் எளிமையானது. இயற்கையானது. ஹேமசந்திரர் நடையில் இருந்த வலுவில்லை. "அஸ்ஸாமிய இலக்கியத்தின், உச்சநிலை, ஹேமசந்திரரிடம் உள்ளது" என ஆனந்த ராமும், குணபிராமும் எண்ணினர். 1865-ஆம் ஆண்டு ஏப்ரல், ஒரு **நோடாய்** என்ற இதழில், எழுதிய "அனேக் பியா காரா அஜுகுட்" (பலதார மணம் தவறு) என்ற கட்டுரையே ஹேமசந்திரரின் முதல் இலக்கியக் கட்டுரையாகும். அதை அவர் தனது புனை பெயரான "ஸ்ரீ சோனார் சந்த" (தங்க நிலா) என்ற பெயரில் எழுதினார். அப்போது அஸ்ஸாமிய சமூகத்தில், குறிப்பாக நடுத்தர பிரிவினரிடம் இருந்த பலதார மணத்தைக் கடுமையாகச் சாடினார். பழைமையில் ஊறிப்போன தனது மாமாவிடமிருந்து தப்பித்துக் கொள்ளப் புனைபெயரில் எழுதினார் போலும். 21-வயதே நிரம்பிய இளைஞரான அவருக்கு இது மிகவும் நுண்ணியமான விஷயமாகும். இதற்குப் பிறகு 1861 ஏப்ரல் 4-ந்தேதி, ஒரு **நோடாய்** இதழில் "ஸ்திரி-ஸிக்ஷ" (மகளிர் கல்வி) என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார். இது "ஹிந்து

---

1 நியூ லைட் ஆன் ஹிஸ்டரி ஆப் அஸ்ஸாமிஸ் லிட்டரச்சர், டி. நியோக், பக்கம் 379.

பாட்டிரய்ட்'' என்ற பத்திரிகை 1861 மே, 5-ந்தேதி வெளியிட்ட கட்டுரையின் மொழிபெயர்ப்பே. அதில் H.C. என்று கையொப்பமிடப்பட்டிருந்தது. அது வேறு யாருமில்லை. ஹேமசந்திரரே. முதல் இரண்டு கட்டுரைகளில் H.V. டிரோசியாவின் தாக்கத்துக்குட்பட்ட ''இளைய வங்கம்'' குறித்துச் சாடினார். ஆனால் கடைசிக் கட்டுரையில் மகளிர் கல்வியை ஆதரித்து எழுதினார்.

முன்பு கூறியதுபோல், இக்கட்டுரைகள், ஹேமசந்திரர், ராஜா ராம் மோகன்ராய், மற்றும் ஈசுவர சந்திர வித்யா சாகரின், தாக்கத்தைப் பெற்றார் என்பதை மெய்ப்படுத்தும்.

அவருடைய அந்திய காலப்பாட்டு (ஆத்ம ஜீவன் சரித்) ஜோனகி என்ற பத்திரிகையில் 1892-ஆம் ஆண்டு வெளிவந்தது. பண்டிட் ஈஸ்வர சந்திர வித்யாசாகரின் சுய சரிதையின் தலைப்பும், 'ஆத்ம ஜீவன் சரிதம்' ஆகும். நவீன அஸ்ஸாமிய உரை நடைக்கு இந்தச் சுய சரிதமே, ஒரு முன்னோடியாகும். அது நடை தவறாமலும், தெளிவாகவும் அமைந்திருந்தது. அதை ஒரு அழியாக் காவியமாக்க, அந்த நடையே போதுமானதாகும்.[1]

வரிசைக் கிரமமாக அவரது நூல்கள் கீழே தரப்பட்டுள்ளன:

1. அஸ்ஸாமிய வியாகரன் (அஸ்ஸாமிய இலக்கணம் 1860)
2. கனியார் கீர்தன் (கஞ்சா குடிப்போரின் பாடல் 1861)
3. அஸ்ஸாமிய லோரர் ஆதிபத் (அஸ்ஸாமிய மாணவர்களின் முதல் புத்தகம்) 1875-76.
4. பஹிரே ரங்-சங் பைட் ரே கௌபாதுரி (வெளியே பகட்டு : உள்ளே நாற்றம் (1876)
5. அஸ்ஸாமிய லோரர் வியாகரன் (அஸ்ஸாமிய மாணவர்களுக்கு இலக்கணம் 1876)
6. பாத் மாலா (நீதிக்கொத்து 1883)
7. அஸ்ஸாமிய ஸ்வத்தியர் நியம் (ஆரோக்கிய வாழ்வின் வழி, 1883)
8. ஹேம-கோஸ் (அஸ்ஸாமிய அகராதி 1900)

---

1 முன்னது பக்கம் 373.

9. பர்ஹசாலிய அபிதான் (சிறிய அஸ்ஸாமிய அகராதி 1903) ஹேமசந்திரர், "அஸ்ஸாம் செய்தி" என்ற ஆங்கிலோ-அஸ்ஸாமிய வார ஏட்டின் ஆசிரியராகவும் இருந்தார். அது பற்றிப் பின்பு பார்ப்போம்.

"இலக்கணம் என்பது பொதுவாக மொழியையும் குறிப்பாகச் சொற்கள் பற்றியும் நிர்வகிப்பதாகும். "பூனை" என்ற சொல் ஒரு சிறப்பு உண்மையாகும். ஏனெனில் பூனையை மட்டுமே அச்சொல் குறிக்கும். "கள்" என்ற பன்மை சேர்ந்தால், அது ஒரு பொதுவான உண்மையைக் குறிக்கும். "கள்" என்ற எழுத்தை "எலிகள்" "குல்லாய்கள்" "வேலைகள்" என்று சேர்த்துக்கொள்ள முடியும். (இலக்கணத் தத்துவம்) இலக்கணமும், எழுத்துமே கல்வியின் முக்கியமான விளம்பர சாதனம் என்று எல்லோரும் அறிவர்" என்று ஹேமசந்திரர் எழுதுகிறார். (பர்ஹ சாலிய அபிதான்-முன்னுரை)

முதல் அஸ்ஸாமிய இலக்கணத்தை அஸ்ஸாமிய மொழியில் தான் ஹேமசந்திரர் எழுதினார். **அஸ்ஸாமிய வியாகரனம்** என்ற இந்தப் புத்தகம் 1860–ஆண்டு சிப்சாகரிலுள்ள அமெரிக்கப் பாப்டிஸ்ட் மிஷனால் வெளியிடப்பட்டது. பள்ளிப் படிப்பு இல்லாத ஹேமசந்திரர், தனது உழைப்பாலும், புத்திக் கூர்மையாலும், ஆங்கிலம், வடமொழி, ஹிந்தி மற்றும் வங்க மொழியை ஆழமாகக் கற்றார். அவரால் அஸ்ஸாமிய மொழி, அதன் அமைப்பு விசேஷ அம்சம் ஆகியவற்றை நன்கு அலசி ஆராய முடிந்தது. வடமொழி இலக்கணம் போலவே எழுதப்பட்ட இந்த நூலின் வடமொழி விளக்கங்களைச் சில இடங்களில் தந்தார். கலைச்சொற்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதை இந்த இலக்கண நூல், முடிவு செய்தது. அது அப்படியே நிலைநின்றுவிட்டது. இந்நூலில், ஒரு வார்த்தையின் எழுத்துக்கள், வாக்கிய அமைப்புகள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான விதிகள் சரியாகத் தரப்பட்டன. நன்றாகப் புரியும்படியும், குழப்பமின்றியும், விதிகள் இருந்தன. "அஸ்ஸாமியமொழி" பற்றிய பகுதி அவருடைய ஆழ்ந்த அறிவுக்கும் மொழியை ஆராயும் திறனுக்கும் ஒரு எடுத்துக்காட்டு. இந்த கட்டுரையைச் சிப்சாகர் நீதிமன்றத்தில் பதிவுருப் பொறுப்பாளராக இருந்தபோது எழுதினர்.

அப்போது அஸ்ஸாமிய மொழி அழியும் தருவாயில் இருந்தது. அஸ்ஸாமிய வியாகரனம், அஸ்ஸாமிய மொழியைச்

பறைக் கீழே குறிப்பிட்டுள்ள பகுதி நன்கு விளக்கும், இப்பகுதி ஹேமசந்திரரின் சுயசரிதையில் காணப்படுகிறது.

''அக்கால கட்டத்தில் எல்லோரும் வங்க மொழியையே விரும்பினார்கள். தாய் மொழியான அஸ்ஸாமிய மொழியை வெறுத்தார்கள். பள்ளி, நீதித்துறை போன்றவற்றில் வங்க மொழியே உபயோகப் படுத்தப்பட்டது. இளைஞர்கள் உரையாடலில் வங்க மொழியையே உபயோகப்படுத்தினார்கள். கடிதப்போக்குவரத்திலும், வங்கமொழியே உபயோகப்படுத்தப் பட்டது. அந்த நேரத்தில்தான் அஸ்ஸாமிய வியாகரனம் ஒரு டானிக் போல வேலை செய்தது. அஸ்ஸாமிய மொழிக்கு ஓர் உயிரூட்டத்தைக் கொடுத்தது. அதுவே அம்மொழி படிக்க ஓர் அடிக்கல்லாக அமைந்தது.

டாக்டர் மைல்ஸ் பிரான்சனின் ''ஆங்கிலம், அஸ்ஸாமிய அகராதி''யே முதல் அஸ்ஸாமிய அகராதியாகும். இது 1867-ஆம் ஆண்டு வெளிவந்தது. அதில் 14,000 சொற்கள் இருந்தன. அதில் பின்பற்றப்பட்ட எழுத்திலக்கணமுறை, ஹேமசந்திரருக்கு பிடிக்கவில்லை. அதுபற்றி அவர் விமர்சித்தார்.'' அதனுடைய எழுத்திலக்கண முறை தவறானது. பொருட்கள் கூட, அவை எப்படி இருக்க வேண்டுமோ, அப்படியில்லை. அஸ்ஸாமியர் அந்த அகராதியால் எப்பயனும் அடையப்போவது இல்லை. இந்த நிலையைப் போக்க சில வருடங்களுக்கு முன் இந்த ஆசிரியர் **ஹேம்-கோஸ்** என்ற பெயரில் ஒரு மிகப் பெரிய அகராதி ஒன்றைத்தொகுத்துள்ளார். 'வெப்ஸ்டர்' ஆங்கில அகராதியை உதாரணமாகக் கொண்டு தொகுக்கப்பட்டது அந்த அகராதி. அது மிகவும்பெரிதாகிவிட்டது. ஆகையால் அதை ''ராபின்ஸன் க்ரூஸோ''வின் படகைப்போல் எங்கும் எடுத்துச் செல்ல இயலவில்லை. (பர்ஹசாலிய அபிதான், முன்னுரை 1892)

'வெஸ்டர்' ஆங்கில அகராதியை (1758-1843) முன் உதாரணமாகக் கொண்டு, **ஹேம்-கோஸ்** என்ற அகராதியை ஹேமசந்திரர் தொகுத்தார் என்பது புலனாகிறது. இலக்கண நூல்கள், அகராதிகள், பள்ளிப் புத்தகங்கள், ஆகியவற்றை எழுத அவர் எடுத்த முயற்சியானது அவருக்கும் அதே போல் ஆங்கிலத்தில் புத்தகங்கள் எழுதிய வெப்ஸ்டருக்கும் ஒரு புற ஒற்றுமை ஏற்படுத்தியது எனக் கூறலாம்.

மரியாதை செலுத்தும் முகத்தான் ஹேமசந்திரரை அவரது இல்லத்தில் தனது நண்பருடன் சந்தித்த பத்மநாதகோகைன் பருவா (1871-1946) ஹேம்-கோஸ் என்ற அகராதியின்

கையெழுத்துப் பிரதி மிகவும் பெரியது என ஊர்ஜிதம் செய்கிறார். அவர்களின் உரையாடலின்போது பத்மநாத் ஹேம்-கோஸ் அகராதியின் கையெழுத்துப் பிரதியைக் காண்பிக்கும்படி ஹேமசந்திரரை வேண்டினார். உடனே ஹேமசந்திரர் உள்ளே சென்று அப்பெரிய புத்தகத்தை மிகச் சிரமத்துடன் கொண்டு வந்தார். விருந்தினர்கள் ஆச்சரியத்துக்குள்ளானார்கள். உரையாடலில் மிகுந்த வருத்தத்துடன் ஹேமசந்திரர் கூறினார் ''எனது வாழ்நாளில் இந்த அகராதி வெளிவரும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை'' ஹேமசந்திரரின் உடல்நிலை இவ்வளவு பெரிய புத்தகத்தை அச்சடிக்கும் பொறுப்பை அவர் மேற்கொள்ள இடம் தரவில்லை. 1896-இல் ஹேமசந்திரர் மறைந்த பிறகு ஷில்லாங் சர் எட்வர்ட் கெய்ட் என்பவரின் கீழ் வேலை பார்த்துவந்த ஹேமசந்திர கோசுவாமி **ஹேம்-கோஸ்** பற்றிய விவரங்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதை வெளியிடுவதில் அரசாங்கத்தை எப்படியோ ஈடுபடச் செய்தார். கர்னல் குர்தான் மற்றும் ஹேமசந்திர கோஸ் சுவாமியின் இடைவிடாத முயற்சியால் **ஹேம்-கோஸ்** 1900 ஆண்டு வெளியிடப்பட்டது.

இலக்கியம் பற்றிக் கற்க அஸ்ஸாமிய சொல்லகராதியான **ஹேம் கோஸ்** மிகவும் இன்றியமையாதது. அது ஒரு சீரிய முயற்சி. 19-ஆம் நூற்றாண்டின் அஸ்ஸாமிய இலக்கியத்தில், ஹேமசந்திரரின் மறைவுக்குப் பின் வெளிவந்த இந்த அகராதி ஒரு மைல்கல் எனக் கூறலாம். டாக்டர் சாமுவேல் ஜான்சனின் அகராதி போல இதுவும் ஹேமசந்திரரின் தனித்த உழைப்பால் வெளி வந்த அகராதியாகும். 22,346 அஸ்ஸாமிய சொற்களும் அவற்றின் பொருள்களும் கொடுக்கப்பட்ட சொல்லிலக்கண அகராதியாகும் இது. பிரான்சனின் அகராதியிலிருந்து பெரிதும் மாறுபட்டது. எழுத்திலக்கணத்தை முறைப்படுத்துவதற்காகச் சில சொற்களை மாற்றி சீர்திருத்தினார். தற்போது நடைமுறையில் உள்ள சொற்களை, கூடுமானவரை மூலத்திற்கு ஒட்டி இருக்குமாறு அமைத்தார்.

**ஹேம் கோஸின்** வெளியீடு ஒருதூண்டுகோலாக அமைந்தது. இதற்குமுன் அஸ்ஸாமிய மொழி, படகோட்டி இல்லாத படகு போல் இருந்தது. ஹேம்-கோஸ் வெளிவந்த பிறகு அந்நிலை முழுவதுமாக மாறிவிட்டது. எழுத்து மற்றும் உபயோக முறையில் உள்ள சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள ஒரு திட்டமான ஆலோசனைப் புத்தகம் மக்களுக்குக் கிடைத்து

விட்டது. இன்றும் அந்தச் சொல்லகராதி, அஸ்ஸாமிய மொழியின் சீரிய நிலை, மற்றும் சமூக அறிவு நிலைக்கு ஓர் அத்தாட்சியாக உள்ளது.

'பரஹ சாலிய அபிதான்' என்ற மற்றொரு அகராதியை யும் ஹேமசந்திரர் தொகுத்தார். அது பள்ளிமாணவர் களுக்கு மிகவும் உபயோகமாக இருந்தது. அந்த அகராதியில் அஸ்ஸாமிய அர்த்தங்களே கொடுக்கப்பட்டன. சரியானஆங்கில அர்த்தங்கள் கொடுக்கப்படவில்லை. அதன் முன்னுரையில் ஹேமசந்திரர் எழுதுகிறார். 'நமது கிராமங்களில் உள்ள பள்ளிகளுக்கு ஆங்கில அர்த்தமில்லாத ஒரு சிறிய அகராதியின் தேவையுள்ளது. இந்த அகராதி ''பரஹ சாலிய அபிதான்'' என்று பெயரிடப்பட்ட போதிலும், கிராமங்களில் உபயோகப் படுத்தப் பெறும் வார்த்தைகளும், வேறு பல அஸ்ஸாமிய வார்த்தைகளும் இந்த அகராதியில் சேர்க்கப்பட்டுள்ளது.'' இதிலிருந்து, பரஹ சாலிய அபிதான், மாணவர்களுக்காக எழுதப்பட்ட போதிலும், மற்றவர்களுக்கும் உபயோககர மானது என்பது நன்கு விளங்கும்.

இந்த அகராதி 1892-ம் ஆண்டு தயாராகி விட்டது. இருப்பினும், **ஹேம்-கோஸ்** போல ஹேமசந்திரருக்கும் அப்பாற் பட்ட சில காரணங்களால், அவர் இறந்த பிறகு 1906 ஆண்டு வெளிவந்தது. உச்சரிப்பு, பால் போன்றவைகளைப் பற்றிய விதிமுறைகள் பற்றிய விவரங்கள் இந்த நூலில் உள்ளன. அவையே நிலையான மொழி நடையை எழுதும் முறையை உறுதியாக்கிற்று. **சம்ஹிப்த ஹேம்-கோஸ்** என்ற மற்றொரு அகராதியையும் அவர் தொகுத்தார். (சுருக்கிய ஹேம்-கோஸ்) அதன் தலைப்பே அது சுருக்கிய ஹேம்-கோஸ்) என்பதை எடுத்துரைத்தது. ஆசிரியரின் கூற்றுப்படி **ஹேம் கோஸ்,** அகராதிக்குப் பிறகு சுருக்கிய அகராதி ஒன்று, **சம்ஹிப்த-ஹேம் கோஸ்**, என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்டது. அதில் வார்த்தை களின் மூலம், அர்த்தம், மொழி மரபு, ஆகியவை கொடுக்கப் படவில்லை. ஆங்கிலம், மற்றும் அஸ்ஸாமிய அர்த்தங்கள் மட்டும் கொடுக்கப்பட்டன. ஆனால் இந்த அகராதியும் வெளியிடப்படவில்லை. ஆசிரியரின் மறைவுக்குப் பிறகு, இதன் கையெழுத்துப் பிரதியும் தொலைந்து விட்டது.

ஹேமசந்திரர், அகராதி தொகுப்போனாகச் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவர். கீல் வாதத்தால் கஷ்டப்படும் ஒருவர், மூன்று அகராதிகளைத் தொகுப்பது என்பது மிகவும்

கடினமான வேலையே. அக்காலத்தில் ஒரு சில பள்ளிகளே இருந்தன. புலவர்கள், அறிஞர்கள் பள்ளிகளில் தொழில் புரிவதில்லை. நூலகத்தில் படிக்கும் வாய்ப்பும் மிகவும் குறைவு. நவீன அஸ்ஸாமிய இலக்கியம் பற்றிய புத்தகங்கள் ஒன்றிரண்டே வெளிவந்தன. இவற்றிற்கிடையே, அலுவலக ஊழியரான ஹேமசந்திரர் தனது முழு நேரத்தையும் செலவழித்து சகாப்தம் படைத்த **ஹேம் கோஸ்** என்ற அகராதியைத் தொகுத்தார் என்பது வியத்தகு உண்மையாகும். மேலும் இரண்டு அகராதிகளைத் தொகுத்தார். மொழியின் மேல் என்ன அன்பு. 1891-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், கோஸ்சுவாமிக்கு எழுதிய கடிதத்தில் ஹேமசந்திரர் கூறுகிறார்: ''இந்த அகராதி தொகுப்பதில் தனிப்பட்ட கவனம் செலுத்த முடிந்தது பற்றி எனக்கு மிகுந்த சந்தோஷம். அகராதி என்பது கொஞ்ச காலமாக விரும்பப்படவில்லை.'' அவர் அந்தத் தொகுப்பை மறைவதற்குச் சில காலத்திற்கு முன்தான் முடித்தார்.

தனது இலக்கிய நூலான **கனியார் கீர்தன்** (அபின் குடிப் போர் பாடல்) பஹீரே ரங்-சங் பீடரே கௌபாதுரி (மின்னுவ தெல்லாம் பொன்னல்ல 1876) என்பன குறிப்பிடத்தக்கவை.

ஹேமசந்திரரின் சம காலத்தவரான குணபிரான்பரூவா 1857-இல் அஸ்ஸாமிய மொழியில் நவீன நாடக முறைக்கு வழி காட்டினார். அவரைப் பின்பற்றி ஹேமசந்திரர் 4-காட்சிகளைக் கொண்ட கணியார் கீர்தன் என்ற நாடகத்தை எழுதினார். ''அபின் குடிப்பதின் கெடுதலை விளக்கும் ஒரு அஸ்ஸாமிய நாடகம்'' என்று ஆசிரியர் அதைக் குறிப்பிடுகிறார், அதன் முன்னுரையில் ''அபின் குடிப்பதால் ஏற்படும் கெடுதல்களை வெளிப்படுத்துவதே இந்நாடக நோக்கம் அபின் குடிக்கும் பழக்கத்தால், அஸ்ஸாம் அழிந்து கொண்டிருக்கிறது'' என்று கூறுகிறார். இந்த நாடகம் மக்களால் விரும்பப்பட்டது. ஆசிரியரின் காலத்திலேயே 6 பதிப்புகள் வெளிவந்தன.

மசூம்தாரின் மகனான **கீர்த்தி கந்நா** மதுவின் அடிமையில் எவ்வாறு கடனாளி ஆகி, தனது சொத்து முழுவதையும் விற்றான் என்பதை நன்கு வர்ணணை செய்கிறது. அவன் மனைவி சந்திர பிரபாவையும் அவனுக்குத் தெரியாமலேயே மதுவுக்கு அடிமை ஆக்குகிறான், மசூம்தார்.

ஒரு வழக்கில் பொய் சாட்சி சொன்னதற்காகச் சிறை தண்டணை அடைகிறான். கடைசியாகத் தன் வழி குறித்து

வருந்துகிறான். ஆனால் தொடர்ந்த வயிற்றுப் போக்கின் காரணமாக இறந்து விடுகிறான்.

மதக் கொள்கைக்குப் புறம்பான முறையில் நடக்கும் வைணவ போதகர்; அடிமை ஒழிப்பு; அறைகுறை ஹிந்திக்கு முன் உரிமை கொடுக்கும் அகந்தை கொண்ட அஸ்ஸாமிய நீதிமன்றச் சேவகர்கள்; கீர்த்தி கந்தாவினால் பாடப்படும் வங்கப்பாடல்கள்; அஸ்ஸாமியப் பெரிய மனிதர்களைப் பாபு என்று அழைக்கும் வழக்கம், அபின் செடி வளர்ப்பதைத் தடை செய்தல், ஆங்கிலம் படிப்பவரைச் சமூகத்திலிருந்து பகிஷ்கரித்தல்—போன்ற அன்றைய அஸ்ஸாமிய கலாச்சார வாழ்க்கையை அப்பட்டமாக அந்த நாடகத்தில் படம் பிடித்துக் காட்டுகிறார் ஹேமசந்திரர். மதுவின் கொடுமையில் அஸ்ஸாமிய நடுத்தர வகுப்பினர் எவ்வாறு அழிகிறார்கள் என்பதை அழகாகச் சித்திரித்துள்ளார்.

தன் நிலை புரிந்து **கீர்த்தி கந்தா**, வருத்தமடைகிறான். அப்போது கூறுகிறான்:

> ''ஒரு துளி மதுவே மிகவும் கொடிய விஷம்: அது பற்றி மது அருந்துவோருக்குத் தெரிவதில்லை. அய்யகோ! அய்யகோ! என்ன பயங்கரம்! மது அஸ்ஸாமையே விழுங்கிவிட்டது.''

சில நாடக உத்திகளில் பின் தங்கிய போதிலும் - நீதி போதனை மற்றும் நகைச் சுவையில் அது ஒரு சிறந்த நாடகமாக அமைந்துள்ளது. நகைச்சுவை வசனத்திற்கு ஹேமசந்திரரின் பணி குறிப்பிடத்தக்கது. அதில் நையாண்டியும், பாரபட்ச மற்ற கண்டிப்பும், நிறைந்திருந்தன, அவை ஆசிரியரின் முற்போக்கு ஆர்வத்தைப் பறை சாற்றும். அந்த நாடகம் 19-ஆம் நூற்றாண்டின் அஸ்ஸாமின் நிலை தடுமாறிய வாழ்க்கையைச் சித்திரித்தது எனக் கூறலாம்.

இந்திய அபின் கமிஷனின் முன் சாட்சியம் சொல்ல 1893 - ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஹேமசந்திரர் அழைக்கப்பட்டார். உடல் நிலை காரணமாக அவர் செல்ல இயலவில்லை. இருப்பினும் தனது கருத்தை அனுப்பினார். **ஆணையத்தின்** உறுப்பினரான H.J. வில்சனுக்கு, ஹேம்சந்திரரின் நூலான **கனியார் கீர்தன்**, ஒரு பிரதி அளிக்கப்பட்டது. அதன் ஆங்கில மொழி பெயர்ப்பை உபேந்திரநாத் பருவா (1859-1953) செய்திருந்தார்.

ஹேமசந்திரரின் 'பஹீரே ரங்-சஸ் பிடரே கௌபாதுரி ஒரு நாவல் அல்ல. நாவல் போல் எழுதப்பட்டக் கட்டுரை எனலாம். அதில் கதாபாத்திரங்களும், சூழ்நிலைகளும் நன்கு விவரிக்கப்பட்டுள்ளன. அந் நூலில் கேலியும் நையாண்டியும் நிறைந்திருந்தன.

அதன் முன்னுரையில் ஹேமசந்திரர் கூறுகிறார்:

''சலவையாளர் சலவை செய்த துணி; மற்றும் புனித கங்கையின் நீர் போல, தம்மை மிகவும் தூய்மையானவர்கள் என்று எண்ணுபவர்கள் தங்கள் சுற்றத்தையே வெறுக்கின்றனர். தங்கள் கண்களைத் திறந்து, சலவையாளர்களால்கூட வெளுக்க முடியாத அழுக்கு அவர்கள் உடலில் இருப்பதைப்பார்ப்பதில்லை. சலவைக் கட்டி கூட அந்த அழுக்கை அகற்றாது.

அவர்களின் வெளித்தோற்றம் சுத்தமாகத்தான் தெரிகிறது. ஆனால் உண்மையில் சுத்தமற்றவர்கள் அவர்கள். வெளியே வெண்மை: உள்ளே கருமை என்ற பழமொழி அவர்களுக்கு நன்கு பொருந்தும். இந்த நூல் அவர்களைக் கண்டுகொள்ள ஏதுவாக எழுதப்பட்டுள்ளது. நான் எழுதியிருக்கிறேன். யாருக்குப் பொருத்தமோ அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும்.''

சுருக்கமான கதை இது தான்: கோவர்தன் என்ற வைஷ்ணவ பிரசாரகர் நகரத்தில் உள்ள மார்கடேஸ்வர் பூகன் என்பவரின் இல்லத்திற்கு வந்து அங்கேயே தங்குகிறார். பூகனும் அவரது மனைவியும் இந்த வைஷ்ணவ குருவின் பால் அளவிலா பக்தி கொள்கின்றனர். பூகன் மனைவியின் அகத்து இருந்த கெட்ட தேவதையை அவளிடமிருந்து விரட்டி அவளைக் காப்பாற்றுகிறார் அக்குரு. இச்செயலால் கோபமடைந்த பிரேந்திரா பருவா என்ற மந்திரவாதி அக்குருவைத் திருட்டு வழக்கு ஒன்றில் உட்படுத்துகிறான். அவ்வழக்கில் கோவர்தான் அபராதம் கட்டுகிறான். பூக்கனின் மனைவி அந்தக் குருவைச் சிறையிலிருந்து வெளியே கொணருகிறாள். இதற்கிடையில் எவ்வளவோ முயன்றும், பூக்கன் இறந்து விடுகிறான். அவன் மனைவியும் சில காலத்தில் இறந்து விடுகிறாள். இந்நிகழ்ச்சி கோவர்தனத்தை ஆழாத் துயரத்தில் ஆழ்த்தி விடுகிறது. அத்துயரத்தில் இருந்து மீளாமலே அவனும் உயிர் துறக்கிறான்.

இக் கதையின் கதாபாத்திரங்களின் பெயரிலே சிலேடை உள்ளது. மார்கடேஸ்வர் (மார்கட்-குரங்கு) பண்டேஸ்வரர்

(பண்டா-வேஷதாரி) பிரேந்திரா (பிர்-கதாநாயகன்) டிரிங் வாட்டர்; ஈட்வெல், போன்றவைகள்.

''பஹரீரே-ரங்-சங் பிடரே கௌபாதூரி''யில் ஆசிரியரின் கைவண்ணத்தை நன்கு காண முடியும். தற்காலச் சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகளை அவர் நன்கு விவரித்துள்ளார்.

உதாரணமாக :

1) பள்ளிகள் துவக்கப்பட்ட போதுதான், இந்நாட்டு மக்களுக்கு ஜாதி கூடாது என்பதை நான் உணர்ந்தேன்

2) வேதங்கள் பற்றிக் கிறிஸ்தவர்கள் என்ன அறிவார்கள்.

3) தாய் மொழியில் பேச வெட்கமடைகிறான் ஒருவன். ஆங்கிலமும், வங்கமும் சேர்ந்து பேசினால், பெரிய மனிதன் என்று எண்ணுகிறான்.

அந்தக்கதையின் கடைசியில் ஒரு கவிதை உள்ளது. அதுவே அக்கதையின் முடிவாகும். அக்கவிதையின் சில பகுதிகள்:

> ''தன் எண்ணத்தை மறைக்க வேதங்களை மேற்கோள் காட்டுகிறான்; துறவி போல் நடிக்கிறான்; அறிவாளி போல் கபட நாடகமாடுகிறான்; கருமை படர்ந்த எண்ணங்கள் உள்ளே; தூய்மை போல் வெளிக் காட்சி; நல்லவன் போல் பாசாங்கு ; துர்குணத்தால் ஏற்பட்ட பாவத்தைப் பெருகூட்டிக் கொண்டே அவன் மற்றவர்களைக் குறை கூறுகிறான்''

இக் கதையில் வேதங்கள் பற்றி அரைகுறையாகத் தெரிந்து வைத்திருக்கும் கோவர்தன் பற்றி எள்ளி நகையாடுகிறார் ஹேமசந்திரர். அவனுடைய சங்கீத ஞானம் பற்றியும் குறிப்பிடுகிறார்.

> ''பக்தி பாடல்கள் பாடுவதில் இந்த மத குரு சிறந்தவர். அவர் காலையில் பாட ஆரம்பித்தவுடன் இலைகள் தாளம் போடும். நாய்களும் நரிகளும், அன்பினால் உந்தப்பட்டு அவருடன் சேர்ந்து ஊளையிடும்.''

கேலிப் பேச்சோடு ஹேமசந்திரர் நிறைவு கொள்ளவில்லை. கூர்மையான அவரது நகைச் சுவையில் சமூகத்தில் உள்ள கேடுகளை எவருடைய தகுதியும் பாராமல் தாக்கினார் : வைஷ்ணவ மதகுரு; சிரஷ்டிரார்; அந்தணர், நீதிபதி அல்லது ஒரு தலைமைக் குமாஸ்தா — யாரையும் அவர் விட்டு வைக்கவில்லை.

அன்றைய சிறந்த எழுத்தாளர் ஹேமசந்திரர். அஸ்ஸாமிய உரைநடை இலக்கியத்தின் தந்தை எனக் கூறலாம். அவருடைய 'பஹிரே. ரங்-சங் பிடபே கௌபாதுரி' அதற்கு ஓர் எடுத்துக் காட்டு. தடையில்லாத அவருடைய எழுத்தோட்டத்தை அதில் காண முடியும். அதுவே அவர் ஒரு சிறந்த எழுத்தாளர் என்பதைப் பறை சாற்றும்.

ஆங்கிலத்தில் அவர் எழுதிய "திருமண முறைகளும் அஸ்ஸாமிய மக்களும் பற்றிய குறிப்புகள் (1892)" இன்றும் நிலவி வரும் திருமண முறைகள் பற்றிக் கூறும் நூல். அந்நியர்கள், அஸ்ஸாமிய மக்களின் திருமண முறைகளைப் புரிந்துகொள்ள ஏதுவாக இருந்தது. அதன் முன்னுரையில் ஆசிரியர் கூறுகிறார்:

"இப்புத்தகம், சில விதங்களில் மாறுபட்டது. அந்நியர்கள் அஸ்ஸாமிய மக்களின் பழக்கவழக்கங்கள்; திருமண முறைகள் பற்றி அறிய வேண்டும் என்ற கருத்து கொண்டு எழுதப்பட்டது, இந்நூல். இந்நூலின் தேவையைச் சிறிது காலமாகவே உணர்வேன். பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கில், வாழும், பழங்குடி மக்கள் மற்றும் ஹிந்துக்களின் திருமணத்தின் போது நடைபெறும் முதலிரவு நிகழ்ச்சிகளில் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விதிகளை மட்டுமே சொல்லியிருந்தார்". மிக விபரமாக எல்லா, நிகழ்ச்சிகளையும் நன்கு எழுதட்டும் என்று, மற்றவர்களுக்கு அதை விட்டுவிட்டார். "முன்னுரைக் குறிப்புகளில்" திருமணம் பற்றி ஹிந்து சாஸ்திரங்களில் கொடுக்கப்பட்ட விதிகளுடன், அஸ்ஸாமியத் திருமணச் சடங்குகள் பற்றியும் விவரிக்கிறார். அதில் 11 பிரிவுகள் உள்ளன. முதல் ஐந்து அந்தணர்களின் திருமணச் சடங்குகள் பற்றிக் கூறுகின்றன. பகுதி 6 அந்தணரல்லாதவர் திருமணம் பற்றிக் கூறுகிறது. பகுதி 7 அகம்ஸ் குடும்பத்தினரின் திருமணம் பற்றிக் கூறுகிறது.

பகுதி எட்டு, கச்சாரி என்ற பிரிவினரின் திருமணம் பற்றிக் கூறுகிறது. பகுதி ஒன்பது மிஷ்ஷிங்ஸ் திருமணம் பற்றியும்; பகுதி பத்து மாப்பிள்ளையைத் திருமணத்தில் எவ்வாறு மகனாகத் தத்து எடுத்துக் கொள்வது என்பது பற்றியும், கலப்புத் திருமணம் பற்றியும் கூறுகிறது. கடைசிப் பகுதியில் கீழ் அஸ்ஸாம் பகுதியில் திருமணச் சடங்குகள் எவ்வாறு நடக்கின்றன என்பதை விளக்குகிறது. சுருக்கமாக அன்றைய நிலையில திருமணங்கள் அஸ்ஸாம் மாநிலத்தில் எபபடி நடந்தன என்பதை விளக்குகிறது இந்நூல்.

பள்ளிப்படிப்பே அறியாத போதும், அவர் தன்னுடைய படைப்பைப் பற்றிக் கூறுகிறார்,

> ''சிறிது ஆங்கில அறிவே இருந்தபோதிலும், இந் நூலைப் படிப்போர்கள், இதை வரவேற்பார்கள். ஹேமசந்திரருக்கு ஆங்கிலத்தின் பால் இருந்த தாக்கம் நன்கு வெளிப்படுகிறது. ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுகள் கழிந்த போதிலும், இன்றுவரை இந்தப் பொருளில் இது ஒரு புத்தகம் தான்.''

பள்ளிப்புத்தகம் எழுதும் ஆசிரியராக ஹேமசந்திரர் குறிப்பிடத்தக்கவர். அஸ்ஸாமிய மொழி பள்ளியில் பயிற்றுவிக்கத் தொடங்கிய அன்றைய நிலையில், அதன் தேவை இன்றியமையாதது. வங்க மாகாணம், ஒரு நேரத்தில், வங்கம், அஸ்ஸாம், ஒரிசா, டில்லி உள்பட ஐக்கிய மாகாணங்கள், மத்திய மாகாணத்தின் சிலபகுதிகள், மற்றும் சோட்டா நாக்பூர் பகுதிகளைக் கொண்டது. 1874-இல் அஸ்ஸாம் வங்கத்திலிருந்து பிரிக்கப்பட்டது. சீப்கமிஷனரின் ஆளுகைக்குக்கீழ் கொண்டு வரப்பட்டது. அதன் முதல் முதன்மை ஆணையர் R. H. கேட்டிங்.

1873-ஆம் ஆண்டு ஜூலை 18-ந் தேதி வங்க லெப்டினன்ட் கவர்னர், சர் ஜார்ஜ் காம்பெல், அஸ்ஸாமிய பிரதானப் புத்தகங்கள் தயாரிக்குமாறு அஸ்ஸாம் கமிஷனருக்கு ஓர் ஆணையைப் பிறப்பித்தார். அந்த ஆணையின்படி, கமிஷனர் கர்னல் ஹாப்கின்ஸ், ஒரு அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையின்படி அஸ்ஸாமிய மொழியில் பிரதான புத்தகங்களுக்கான பரிசுகள் அறிவிக்கப்பட்டன. முதல் பரிசு ரூ. 500/-, இரண்டாவது பரிசு 100/-. 1873-ஆண்டு அக்டோபர் 1-ந்தேதிக்குள் கையெழுத்துப் பிரதிகள், திப்ருகர் உதவிக் கமிஷனரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மற்ற எழுத்தாளர்களோடு, ஹேமசந்திரரும், சில பிரதானப் புத்தகங்களைச் சமர்ப்பித்தார்: 58 புத்தகங்கள் தேர்வுக்கு வந்தன. ஹேமசந்திரரின், **அஸ்ஸாமிய லோரர் ஆதிபாத்** (அஸ்ஸாமிய மாணவர்களுக்கு முதல் புத்தகம்) சிறந்ததென, தேர்வுக் குழு முடிவு செய்தது. மூன்று பாகங்களைக் கொண்டது அந்நூல்.

ஆதிபாத்தின் ஆசிரியர் பெயர் ஹேமசந்திர தேவசர்மா. வங்கபிரதான நூலான **வர்ணபரிச்சயா**வின் ஆசிரியர் ஈஸ்வர் சந்திர சர்மாவின் பெயரைப் போலவே இருந்தது. மூன்று பாகங்களைக்கொண்ட ஆதிபாத் மிக எளிய நடையில் யாவரும் புரிந்துகொள்ளும்படி எழுதப்பட்டது. மொழி கற்பவர்களுக்கு

எளிதாக இருந்தது முதல் இரண்டு பாகங்களில் உள்ள சில வாக்கியங்கள் மிகச் சுருக்கமாகவும், சாரமுள்ளதாகவும், இருந்தன. கடைசிப் பகுதியில் உள்ள பாடல்களில் தகவல்கள் நிறைந்திருந்தன. உதாரணமாகக் கீழே உள்ள கதையைப் பார்ப்போம்.

## முதியோரைக் கேலி செய்யாதே

கூனல் விழுந்த முதுகுடன், ஒரு முதியவர், கோலின் துணைக்கொண்டு வீதியில் சென்றுகொண்டிருந்தார். அவரைப் பார்த்த ஒரு இளைஞன் விளையாட்டாகக் கேட்டான்:

*''தாத்தா! இந்த வில்லை உடைப்பதற்குக் கூலி எவ்வளவு?*

*அதைக் கேட்ட முதியவர் கூறினார்.*

*''முட்டாள்! நீ ஏன் இப்போது இதை உடைக்க வேண்டும். கொஞ்சம் பொறுத்திரு! நீ என் போல வயதானவுடன் உனக்கு இனமாகவே அது கிடைக்கும்.''*

*வயதான பிறகு எல்லோருடைய நிலையும் முதியவர் போல் ஆகிவிடும் என்பதை உணர்ந்த இளைஞன் மிகவும் வருந்தினான். அவமானமடைந்ததாக எண்ணினான்.*

*முதல் அஸ்ஸாமிய பிரதான நூலான* **ஆதிபாத்தின்** *பங்கு குறிப்பிடத்தக்கது. அஸ்ஸாமியச் சிறார்களை அவர்களுடைய தாய்மொழியான அஸ்ஸாமிய மொழியை எளிதாகவும், வேகமாகவும் கற்க உதவிற்று.*

அவருடைய 'ஆத்ம-ஜீவன் சரித்'' என்ற நூலில் ஹேமசந்திரர் கூறுகிறார். ''1873-ல் **துணைநிலை ஆளுநர்** சர் ஜார்ஜ் காம்பெல் வெளியிட்ட அறிக்கையின்படி, மற்றவர்களுடன் நானும் **ஆதிபாத்** என்ற பிரதான புத்தகத்தை எழுதினேன். ஏறத்தாழ இதுபோல 50 புத்தகங்கள் எழுதப்பட்டன. தகுதியை நிர்ணயிக்க ஏற்பட்ட குழு ஆதிபாத் சிறந்த புத்தகம் எனத் தீர்மானித்து எனக்கு ரூ. 500/- பரிசளித்தது. அதற்குப் பிறகும் மற்ற புத்தகங்கள் எழுதி அரசாங்கத்திடம் இருந்து ரூ. 1000/- பரிசு பெற்றேன்.''

மற்ற புத்தகங்கள் என்று ஹேமசந்திரர் குறிப்பிடுவது: பாத் மாலா; அஸ்ஸாமிய லோரர் வியாகரன், அஸ்ஸாமிய சியாஸ்தியார் நியம் (மொழி பெயர்ப்பு).

மாணவர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு எழுதப் பட்ட இலக்கண நூல் அஸ்ஸாமிய லோரர் வியாகரண் (அஸ்ஸா மியமாணவர்களின் இலக்கணம் 1886). இந்த நூற்றாண்டின் முதல் மூன்று பத்தாண்டுகள் வரை இந்த இலக்கண நூல் உபயோகத்தில் இருந்தது. அஸ்ஸாமில் உள்ள பள்ளிகளின் உபயோகத்திற்காக வடமொழி மற்றும் ஆங்கிலத்தில் தேர்ந் தெடுத்த பாடல்களும், தழுவல்களும் நிறைந்த பாத்மாலா (பாடல்கள் 1883) என்ற நூலைக் கொணர்ந்தார். இம்மா திரிப் புத்தங்கள் அஸ்ஸாமில் புதியவையே. பாத்மாலா என்ற பெயரே ஈஸ்வர சந்திர வித்யாசாகரின், ஈசோப் கதையின் தழுவலான, வங்க மொழியில் வெளிவந்த **கதாமாலா**, என்ற நூலை நினைவுபடுத்துகிறது. ஹேமசந்திரரின் **பாத்மாலாவில்** கதையிலிருந்து விஞ்ஞானம் வரை இருந்தது. அதில் 5 பகுதி கள் உண்டு. முதல் பகுதியில் 4 பாடங்கள்; ஈசோப் கதை யின் தழுவல்கள்; பஞ்ச தந்திரக் கதைகள் மூன்று; ஹேமசந்திர ரின் சொந்தக் கதைகள் இரண்டு. இரண்டாவது பகுதியில் சிந்தனையைக் கிளரக்கூடிய 8 கட்டுரைகள்; இருந்தன. மூன்றாம் பகுதியில் பிராணிகள், பறவைகள்; பூச்சிகள் பற்றி 14 பாடங்கள் இருந்தன. 4 வது பகுதியில் வாழ்க்கை 'சரிதம் மரங்களைப் பற்றிய 9 கட்டுரைகள்; தாதுப் பொருட்கள் மற்றும் இயற்கைப் பற்றிய செய்திகள் இருந்தன. கடைசிப் பகுதியில் மகாபாரதத்திலிருந்து தழுவல் செய்யப்பட்ட 11 பாடங்கள் இருந்தன. ராமாயணமும், மார்க்கண்ட புராணமும் அதில் சேர்க்கப்பட்டிருந்தன. வெவ்வேறு இடங்களிலிருந்து இக்கட்டுரைக்கு வேண்டிய ஆதாரங்களை இதன் ஆசிரியர் சேகரித்துள்ளார். இக்கட்டுரைகளை எழுதும்போது இக்கட்டு ரைகள், கீழ்குடிப் பிறந்தோர் மனத்தில் ஒருவிதப் பயன் ஏற் படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடனே எழுதினர். எளிமை, தெளிவு, மற்றும் உணர்ச்சி போன்றவற்றை ஒவ்வொரு பக்கத்திலும் காணமுடிகிறது. ஹேமசந்திரரின் உரை நடை யில் ஒரு மென்மையைக் காண முடிந்தது.

அவருடைய **சியாஸ்தியார் நியம்** அல்லது **காபாலே ரகி போர் உபாயா**, என்ற நூல் ஆரோக்கியத்திற்கு வழி என்ற நூலின் அஸ்ஸாமிய மொழி பெயர்ப்பாகும். ஆனால், அது, ஒரு மொழி பெயர்ப்பு எனக் கூறுவது கடினம்: அது, மூலம்

போல அமைந்திருந்தது. சுகாதாரம் மற்றும் சுத்தம் பற்றிய முதல் அஸ்ஸாமிய மொழிப் புத்தகம் இதுவே.

மேலே கூறிய நூல்களைத் தவிர, ஒரு ஒப்பிலக்கண நூலையும், **காம்ரூபர் தந்திரா** என்ற நூலையும் ஹேமசந்திரர் இயற்றினர். ஆனல் இவைகள் வெளியிடப்படவில்லை. ஒப்பிலக்கண நூலை அவர் அன்பாக வளர்த்த குரங்கு கிழித்து விட்டது. அந்நூலைக் காப்பாற்ற போனபோது, அந்தக் குரங்கு, ஹேமசந்திரரின் முகத்தில் நகத்தி கீறி விட்டது. **சம்ஹாப்த ஹேம்கோஸ்** போல இரண்டாவது நூலான **காம்ரூபர் தந்திரா**வின் கையெழுத்துப் பிரதி கிடைக்கவில்லை. 1883-இல் காம்ரூபாவில் இருந்த தந்திராக்கள் பற்றி ஒரு குறிப்பை எழுதும்படி அரசாங்கம் ஹேமசந்திரரைக் கேட்டுக் கொண்டது. அதற்காகக் **காம்ரூபர் தந்திரா**வை அவர் எழுதியிருக்கலாம்.

# 6. அஸ்ஸாம் செய்தி

1882 மற்றும் 1885-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் தேசிய இதழான ''அஸ்ஸாம் செய்தி'' என்ற வார இதழின் ஆசிரியராகச் சேர்ந்தார் ஹேமசந்திரர். தனது வேலையை மிகுந்த கண்ணியத்துடனும் சரியாகவும் செய்தார். கௌகாத்தியில் மாணிக் சந்திர பருவா, மற்றும் ஆனந்த ராம் பூக்கன் கூட்டாக நடத்திய ''பருவா, பூக்கன் சகோதரர்கள்'' என்ற பெயரில் உள்ள நிறுவனம் இந்த வார இதழை நடத்தியது.

ஹேமசந்திரர் கூறுகிறார்: ''நான் எனது அரசாங்க வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு (1882) தேசியப் பற்றுள்ள சில அஸ்ஸாமியர்கள் ஒரு ஆங்கில அஸ்ஸாமியப் பத்திரிகை வெளியிட விரும்பினார்கள். என்னை அதன் ஆசிரியராக அமர்த்தினார்கள். நான் தனியாக, கூடுமான வரையில் மற்றவர்களின் உதவியில்லாமல் அந்த இதழை நடத்தினேன். அவ்விதழ் வெகுகாலம் நடக்கவில்லை என்ற உண்மை எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.''

அபாய் சங்கர் குகா அதன் துணை ஆசிரியர். மாணிக் சந்திர பருவா, அவ்வப்போது ஆங்கிலக் கட்டுரைகளை வழங்கினார். வெகு சீக்கிரத்தில் ஹேமசந்திரர் ஒரு சிறந்த ஆசிரியர் என்பதை நிலை நாட்டினார். ஒரு நேரத்தில் அந்தப் பத்திரிகைக்கு 900 சந்தாதாரர்கள் இருந்தனர்.

சரியான ஆசிரியர், துணை ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால், அவ்விதழ் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்தது. கடைசியாக 1885-ஆம் ஆண்டு அறவே நின்றுவிட்டது.

''அஸ்ஸாம் செய்தி'' பத்திரிகை குறுகிய காலத்தில் மிக உன்னத நிலையை அடைந்தது. அதற்கு அதன் ஆசிரியரான ஹேமசந்திரரின் முன்னேற்பாடு; விசால மனப்பான்மை; மற்றும் தீவிர தேசப்பற்றேகாரணம். அரசாங்கத்தின்வருவாய்க் கொள்கை, மொழிக் கொள்கை மற்றும் ஆங்கில அதிகாரிகளின் கர்வத்தை மிகவும் கடுமையாக விமர்சித்தது அவ்விதழ். காட்டிலாகாவின் வருமானம், நியாயமில்லாமலும், அதிகமாகவும் கூடிவிட்டது என ''அஸ்ஸாம் செய்தி'' விமர்சித்தது. இச்செய்தி வெளி வந்தவுடன், ஆசிரியரின் எண்ணத்தை அரசாங்கம்

கோரியது. அப்போது, அரசாங்க வருமானத்தை நிர்ணயம் செய்யும்போது மக்களுக்கு எவ்வித கஷ்டமும் இல்லாத நிலையில் தீர்மானிப்பதாக ஒரு உத்திரவாதம் கொடுத்தது. தராங் ஜில்லாவில் வேலைக்கு ஆள் எடுக்கும் நாசகார முறையை அரசாங்கத்தின் கவனத்திற்கு இப்பத்திரிகை கொண்டுவந்தது. இதன் காரணமாக உள்ளூரைச் சேர்ந்த வேலையாட்கள் எடுக்கும் முறை ரத்தாயிற்று.

தனது அரசியல் எண்ணங்களில் மிகவும் தீவிர நோக்குடையவர் ஹேமசந்திரர். ''அஸ்ஸாம் செய்தி'' பத்திரிகையில் அடிக்கடி அரசியல் செய்திகள் அலசப்படும். ஒரு சமயம், ஆங்கிலேய அதிகாரி ஒருவர் ஒரு இந்திய அதிகாரியை அவமானம் செய்துவிட்டார். அதுபற்றி அஸ்ஸாம் செய்தியின் ஆசிரியர் ஒரு செய்தி வெளியிட்டார்.

''ராஜ பரம்பரையைச் சேர்ந்த ஒரு ஜில்லா மேலதிகாரி ஒருவர் உள்ளார். யாராவது அவர் முன் செருப்புடன் நின்றால் அவர் கண்ணாலேயே சுட்டு விடுவார். அவர் அலுவலகத்தில் வேலை பார்க்கும் ரமேஷ் சந்திர பண்டோபாத்யாயா அவரது ஊதியத்தைப் பெற அந்த மேலதிகாரியின் அறைக்குச் சென்றார். ரமேஷ் சந்திர பண்டோபாத்யாயா காலில் செருப்பு அணிந்திருந்தார். அது அந்தப் பெரியவரின் கண்ணில் பட்டுவிட்டது. காலில் உள்ள செருப்பைக் கழற்றுமாறு அந்த அதிகாரி பணித்தார். ஆனால் ரமேஷ்பாபு மறுத்துவிட்டார். அதற்காக ஒரு மாதச் சம்பளம் அபராதம் விதிக்கப்பட்டது. திரு. லாம்ப் துரையால் தான் நடத்தப்பட்ட விதம் குறித்து, ரமேஷ் பாபு, உதவிக் கமிஷனருக்கு முறையிட்டார். அவர் வேறு யாருமல்ல — ஒரே இனத்தைச் சேர்ந்தவரே! ரமேஷ்பாபுவின் முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. கடைசியில் சூழ்நிலைத் தாழ்வு காரணமாக வேலையை ராஜினுமா செய்துவிட்டார் ரமேஷ்பாபு. அவர் போன்ற இளைஞர்கள் பற்றி எனக்கு மிகுந்த மகிழ்ச்சி'' எனக் கூறுகிறார் ஹேமாசந்திரர்.

ஹேமசந்திரரின் தேசிய உணர்ச்சியை விளக்க 1882-ஆம் ஆண்டு மார்ச்சு 6-ந் தேதி சிப்சாகரில் ஆரம்பித்த அஸ்ஸாம் கழகம் ஒரு எடுத்துக்காட்டு. தீனர்நாத் பெஸ் பருவா தலைவராகவும்; கங்கா கோவிந்த பூக்கன் செயலாளராகவும் பொறுப்பேற்றனர். அஸ்ஸாம் மக்களின் நிலையைச் சீர் செய்வதே அந்த **கழகத்தின்** நோக்கம்.

சுரேந்திரநாத் பானர்ஜியும், மற்றவர்களும் 1876-இல் நிறுவிய இந்திய **கழகம்** இதற்கு முன்னோடியாக இருந்திருக்கலாம். 1882 ஜூலை 23-ந்தேதி, அஸ்ஸாம் அசோசியேஷன் நிதி கோரி ''அஸ்ஸாம் செய்தி''யில் ஒரு வேண்டுகோள் வெளியிட்டது. அதே வேண்டுகோள் சுரேந்திரநாத் பானர்ஜியால் வெளியிடப்படும் ''தி பெங்கால்'' என்ற இதழில் 1882 டிசம்பர் 15-ந்தேதி வெளிவந்தது.

## தேசிய நிதி

தேசிய நலனைக் காக்கவும், அரசியல் சட்டத்திற்குட்பட்டுக் கிளர்ச்சி செய்யவும் தேசிய நிதி கோறுதல்.

அஸ்ஸாம் செய்தி

ஆங்கில— அஸ்ஸாமிய வார இதழ்

கௌகாத்தி, ஜூலை 23

ஒரு தேசிய நிதி தேவை. ஏழை, எளியோர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனப் பாராமல், தங்களால் இயன்றதை இந்த நிதிக்குக் கொடுத்து உதவக் கோருகிறோம். இந்த வேண்டுகோள், இந்நாட்டின் அறிஞர்களின் சார்பில் விடப்பட்டுள்ளது. இந்த நிதி மிக அவசரத் தேவை.

தி பெங்காலியின் ஆசிரியர் 'அஸ்ஸாம் செய்தி'யை ஆதரித்தார் என்பது நன்கு புலனாகிறது. இந்தியன் கழகமும், அரசியல் சட்டதிட்டத்துக்குட்பட்டுக் கிளர்ச்சி செய்ய நிதி திரட்ட வழி முறைகளை ஆராய்ந்தது. இந்தியன் அசோசியேஷன் துவக்கிய நோக்கை, அஸ்ஸாம் பூர்த்தி செய்தது. 1885-ஆம் ஆண்டு அஸ்ஸாம் செய்தி இதழ் நின்றபோது, 'தி பெங்காலி' பத்திரிகையின் ஆசிரியர் மிக வருத்த மடைந்தார். சுரேந்திரநாத் பாணர்ஜி போல், ஹேமசந்திரர் தீவிர தேசியவாதி அல்ல; என்றாலும் அவர் ஒரு சிறந்த தேசியவாதியே!

அஸ்ஸாம் செய்தி இதழை மக்கள் ஆதரித்தனர். புத்தக விமர்சனத்திற்கு ஒரு நிலையை வகுத்தது இந்த இதழ்தான். அதன் ஆசிரியர் விமர்சன விஷயத்தில் பாரபட்சமன்றி நடந்துகொண்டார். என்றாலும் சில எழுத்தாளர்களின் விரோதத்தை அடைய நேர்ந்தது. எழுத்துப் பிழை இருந்தால்கூட அக் கட்டுரைகள் வெளியிடப்படமாட்டா! சில சமயங்களில் ஆசிரியர் கூறுவார்: ''உங்கள் கட்டுரை எனது குப்பைக் கூடையை அழகு செய்கிறது.''

'அஸ்ஸாம் செய்தி' புத்தக விமர்சனத்தை நிறுத்துவது என்று முடிவு செய்தது. அப்போது ''அஸ்ஸாம் பந்து'' என்ற மாதப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்த குணபிராம் பருவா கூறுகிறார் :

''நமது மாநிலத்தில் நூல் வெளியீடு மிகவும் குறைவு. விமர்சனம் செய்யும், பத்திரிகைகள் மிக மிகக் குறைவு. ஏன்! 'அஸ்ஸாம் செய்தி' ஒன்றுதான் புத்தக விமர்சனம் வெளியிடு கிறது. அதன் ஆசிரியர் மிகச் சிறந்த திறனாய்வாளர். புதிய எழுத் தாளர்கள், அவரின் விமர்சனத்தால் சிறப்பான பயிற்சி பெற முடியும். நூல்களின் தகுதியை ஆசிரியரே முடிவு செய்வதால், அது நம்பகரமானது, என்ற எண்ணம் படித்தவர்களிடேயே ஏற்பட் டது. நமது சமுதாயத்திலும், இலக்கியத்திலும் உள்ள தரத்தை யும், தரமற்ற நிலையையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய அவசியமுள்ளது. 'அஸ்ஸாம் செய்தியின்' ஆசிரியர், மக்களின் முணுமுணுப்புக்குச் செவிமடுக்காமல், தொடர்ந்து சமுதாய மற்றும் இலக்கிய தரத்தைச் சீர்தூக்கி விமர்சனம் எழுதுவார் என நம்புகிறோம்.

நவீன அஸ்ஸாமிய இலக்கியத்தின் மூவர்களான குணபிராம் பருவாவின், மேற்கூறிய கருத்து ''அஸ்ஸாம் செய்தி''யின் இலக்கிய தரத்தை நன்கு உணர்த்தும்.

அஸ்ஸாமிய எழுத்திலக்கணம் பற்றிப் பிடிவாத எண்ணம் கொண்டிருந்தார் ஹேமசந்திரர். குணபிராம் பருவாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த ''அஸ்ஸாம் பந்து'' பத்திரிகையில் கையாளப்பட்ட எழுத்துக்களையும், வாக்கிய அமைப்புகளையும் ஹேம்சந்திரர் ஒத்துக் கொள்ளவில்லை. இலக்கிய வாதிகளான ஹேமசந்திரர் மற்றும் குணபிராம் பருவாவைச் சுற்றி இரண்டு இலக்கிய வட்டங்கள் உருவாகின. ஹேமசந்திரரின் வட்டம் இனிமையான எளிய உரைநடையைப் பின்பற்றியது. ஆனல் குணபிராம் பருவாவை சுற்றிய இலக்கிய வட்டமோ, வடமொழி கலந்த அஸ்ஸாமிய மொழியைப் பின் பற்றியது. வடமொழிக் கலப்பு, அஸ்ஸாமிய மொழியை மிகவும் வளையும் தன்மைக்கு மாற்றியது.

'அஸ்ஸாம் செய்தி' பத்திரிகைத் தொழிலின் நிலையை உயர்த்தியது. தேவைப்படும் செய்திகளை வெளியிட்டதோடு மட்டுமின்றி, மக்களின் கருத்துக்களைப் பெற்று, பொதுவான பிரச்சனைக் குறித்தும் விவாதித்தது.

எழுத்திலக்கணம் மற்றும் சொற்றொடர் பற்றி ஒரு நியதியை ஏற்படுத்தி முன் உதாரணமாக இருந்தது.

இப்பத்திரிகையின் நிலை பற்றி 1883-84 ஆண்டின் ஆட்சிக் குறிப்பு கூறுவதாவது:

''இந்த வார இதழ், அதனை நடத்துபவர்கள், ஆசிரியர்கள், மற்றும் சந்தாதாரர்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்கிறது. கீழ்வங்கத்துடன் அது ஒத்துப் போகவில்லை என்று நான் எண்ணுகிறேன். சிப்சாகரில் நடந்த சில **குற்றவியல் வழக்குகளைத்** தவிர வேறு எந்த விதத்திலும் இந்த இதழ் அஸ்ஸாமிய மக்களுக்கும், ஆட்சியாளருக்கும் இடையே எந்த விதமான கெட்ட எண்ணத்தையும் உருவாக்கவில்லை.''

இலக்கிய அழகு இன்றி, இயற்கையாக எழுத முடியும் என்பதற்கு ''அஸ்ஸாம் செய்தி'' ஒரு உதாரணமாகும். இப்பத்திரிகையின் மூலமே இப்போது உள்ள சொல்லிலக்கணம், மறுபடியும் உரிய இடத்தைப் பெற்றன எனலாம். ''சரியானது'' என்பதின் மறுபெயர் தான் இப்பத்திரிகை எனக் கூறலாம்.

கல்கத்தாவிலிருந்து வெளிவந்த 'ஜோனகி' என்ற பத்திரிகையை ஆரம்பித்த லக்ஷ்மிநாத பெஸ் பருவா மற்றும் ஹேமசந்திர கோஸ்சுவாமி இப்பத்திரிகையின் (அஸ்ஸாம் செய்தி) மூலமே இலக்கியக் கல்வி பெற்றனர் எனக் கூறலாம்.

''எனது இளம் வயதில் சிறந்த அஸ்ஸாமிய சொற்களுக்கு நான் ''அஸ்ஸாம் செய்தி'' பத்திரிகையை ஆவலுடன் பார்ப்பேன்'' என பெஸ்பருவா தனது சுய சரிதையில் கூறியுள்ளார்.

ஒரு சிறந்த பத்திரிகை ஆசிரியர் வெற்றியின் பரிசை அவன் மறைவினுல் தான் பெற முடியும். ஹேமசந்திரர் அப்பத்திரிகையோடு வாழ்ந்தார்; அதோடு இறந்தார். ''அஸ்ஸாம் செய்தி''யின் தாக்கத்தை வளரும் தலைமுறையில் நன்கு காண முடிந்தது. இப்போது அது ஒரு சகாப்தம். அதன் ஸ்தாபகர் யார் என்பதை மறந்துவிட்டனர். ஆனுல் அப்பத்திரிகையின் தாக்கத்தை இன்றும் காண முடிகிறது.

# 7. முடிவுரை

ஹேமசந்திரரின் 60 ஆண்டு வாழ்க்கை ஒரு சகாப்தம். குழம்பிப் போன அஸ்ஸாமிய மக்களையும், அஸ்ஸாமிய மொழியையும் அதன் உரிய பீடத்தில் அமர்த்தவும், நவீன அஸ்ஸாமிய இலக்கியத்திற்கு ஒரு தூண்டு கோலாகவும் அவரது வாழ்க்கை அமைந்திருந்தது. 19-ஆம் நூற்றாண்டில் ஏறத்தாழ 50 ஆண்டுகள் நிறைந்திருந்தது அவர் வாழ்க்கை. அக்கால கட்டத்தில் முப்பெரும் அஸ்ஸாமிய இலக்கியச் சிற்பிகளான, ஆனந்தராம் தீக்கியல் பூக்கன்; ஹேமசந்திரர், மற்றும் குணபிராம் பருவா அஸ்ஸாமையும், அஸ்ஸாமிய மொழியையும் சீர்படுத்தி, நல்ல நிலையில் வைக்கவும், மேற்கத்திய எண்ணங்களை பிரதிபலிக்கச் செய்யவும் பாடுபட்டனர்.

பள்ளிப்படிப்பு இல்லாதவர் ஹேமசந்திரர். இருப்பினும், விடாமுயற்சி, புத்திக்கூர்மை மற்றும் தன்னையே மொழியின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்துக் கொண்டாலும், அன்றைய கல்விமான்களில் ஒருவராகக் கருதப்பட்டார். ஆங்கிலம் வடமொழி, வங்கம், மற்றும் இந்தி மொழியிலும் புலமைபெற்ற ஹேமசந்திரர், அஸ்ஸாமிய மொழிக்கு ஒரு நல்ல அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். அஸ்ஸாமிய மொழிக்கு விஞ்ஞான ரீதியான ஒரு அடிப்படையைக் கொடுத்தார். தேவையான இலக்கணம் மற்றும் அகராதிகளை எழுதி அஸ்ஸாமிய மொழியை நல்ல நிலையில் இருக்கச் செய்யப் பாடுபட்டார்.

அவருடைய நாவல்களும் ஹாஸ்ய நாடகங்களும் மிகச்சிறந்த இலக்கிய நூல்கள் எனக் கூற முடியாது. இருப்பினும் அன்றைய சூழ்நிலையில், மக்களிடத்தே இருந்த குறைகளை நன்கு எடுத்துக் காட்டினர். ஹேமசந்திரரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த ''அஸ்ஸாம் செய்தி' அழிக்க முடியாத அடிச் சுவட்டை ஏற்படுத்தியது எனலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, அன்றுவரை கீழ்நிலையில் இருந்த அஸ்ஸாமிய மொழியை ஓர் இடத்தில் நிறுத்தி அதற்கு ஒரு நிரந்தரநிலை ஏற்படுத்திக் கொடுத்தவர் ஹேமசந்திரரே. டாக்டர் சாமுவேல் ஜான்சனின் கூற்றுபடி ''ஒரு நூலானது வாழ்க்கையை அனுபவிக்கவோ, சகித்துக்கொள்ளவோ, உதவவேண்டும்'' இக் கருத்தை எண்ணத்தில் கொண்டு ஹேமசந்திரரின் நூல்களைச்

சீர்தூக்கினுல் என்ன முடிவுக்கு வருவது என்பது கடினமே. எது எப்படியிருப்பினும், அவரது இலக்கண நூலும் அகராதியும், என்றும் மனதை விட்டு அகலாத நூல்கள். அவைகளை இலக்கியங்களாகக் கொள்ள முடியாது. ஆனுல், இலக்கியக் கல்விக்கு இன்றியமையாத சாதனங்கள் எனலாம்.

அவருடைய நையாண்டி நாடகமான **கணியார் கீர்த்தனும்**, நாவல் போன்ற **பகஜு¬ரே ரங் சங் பைதிரே** என்ற நூலும் நீதி நூல்கள். படிக்க இன்பமூட்டுபவை, அவர் பதிப்பாசிரியராக வெளியிட்ட ''அஸ்ஸாம் செய்தி'' ஒரு சிறந்தவார இதழ், முக்கியம் வாய்ந்தது. இன்றைய அஸ்ஸாமிய உரை நடைக்கு ஒரு வடிவம் கொடுத்தது எனக் கூறலாம். வங்க உரை நடையிலக்கியத்திற்கு ராஜாராம் மோஹன் ராய் போல, அஸ்ஸாமிய உரை நடை இலக்கியத்தில் ஹேமசந்திரருக்குத் தனியிடம் உண்டு.

அவருடைய **ஹேம்-கோஸ்** அஸ்ஸாமிய மொழிக்கு உற்சாகமூட்டியது என்றுல் அது மிகப் பொருந்தும்.

ஹேமசந்திர கோஸ்சுவாமி கூறுகிருர்: அஸ்ஸாமிய மொழிக் கல்வி மறுபடியும் துவங்கப்பட்டுள்ளது. புதிய இலக்கியப் பிரிவுகள் தோன்றியுள்ளன. இவையனைத்திற்கும் ஹேம்-கோஸ். தான் காரணம். பிற்காலத்தில் அஸ்ஸாமிய மொழி தன் பிரிவுகளை பெரிதாக்கினுல் அதற்கும் காரணம் ஹேம்-கோஸ். அஸ்ஸாமிய மக்களுக்கு ஹேம்-கோஸ் விலை மதிப்பிட முடியாத ஒரு பொக்கிஷம்.

19-ஆம் நூற்ருண்டு அஸ்ஸாமியஇலக்கியத்தில் ஹேமசந்திரருக்குத் தனியிடம் உண்டு. அவர் காலத்தில் அஸ்ஸாமிய இலக்கணத்தைப் பொறுத்த வரையில் அவர் ஒரு முடிசூடா மன்னர் எனக் கூறலாம். டாக்டர் ஜான்சனைப் போல அவருடைய ஆளுமை அவர்எழுதிய நூல்களில் இல்லை. **ஹேம்-கோஸ்** என்ற அகராதி ஹேமசந்திரரின் நுண்ணறிவுக்கு ஒரு சரியானஎடுத்துக் காட்டாகும்.

ஹேமசந்திரர் 19-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த போதிலும், 20-ஆம் நூற்ருண்டின் நடுப்பகுதியில் கூட அவர் பெயர் ஒரு கலங்கரை விளக்கம் போல் அஸ்ஸாமிய மக்களை நடத்திச் சென்றது. திடக்கொள்கை உறுதி, ஞாபகசக்தி, சஞ்சல மற்ற அன்பு போன்றவை அவர் வாழ்க்கையின் உறைகல் எனக்

கூறலாம். இவையனைத்தும், அவரை உன்னத நிலைக்குக் கொணர்ந்தது எனலாம்.

பிற்காலத்தில் **ஹேம் கோஷைக்** காட்டிலும் சிறந்த அகராதிகள் வெளிவரலாம். **அஸ்ஸாமிய வியாகரணத்தைக்** காட்டிலும் நல்ல இலக்கண நூல்கள் வெளியிடப் படலாம். இருப்பினும், அஸ்ஸாமிய இலக்கிய வரலாற்றில் நவீன அஸ்ஸாமிய இலக்கியத்தை நிர்மாணித்தவர் ஹேமசந்திரரே என்று பொன் எழுத்துக்களில் பொறிக்கப்படும். அவரைப் போல, இந்தப் பூமியில் யாரும் உதிக்கவில்லை எனத் தயக்கமின்றி யாரும் கூறலாம். ''அவருடன், அத்தரம், அழிந்துவிட்டது''.

# நூல் விவர அட்டவணை


1. ஹேமசந்திர பருவா ஜிவன் - சரித்
   *எஸ். சர்மா கடகி, 1927.*

2. மாடர்ன் அஸ்ஸாமிஸ் லிட்டிரேசர்
   *பி. கே. பருவா, 1957.*

3. நியூ லைட் ஆன் தி ஹிஸ்டரி ஆன் அஸ்ஸாமிஸ் லிட்டிரேசர்
   *டி. நியோக், 1962.*

4. அஸ்ஸாமிய சாகித்யர் சாமு புரஞ்சி
   *ஜெ. என். கோஸ்வாமி, 1964.*

5. பொலிடிகல் ஹிஸ்டரி ஆப் அஸ்ஸாம், வால்யூம் I
   *எச். கே. போர்பூசாரி, 1977.*

6. டிக்ஷனரி ஆப் நேஷனல் பயாகிரபி, வால்யூம் I
   *(பக்கம் 142-43)*

7. எர்லி பிரிட்டிஷ் ரிலேஷன்ஸ் வித் அஸ்ஸாம்
   *எஸ். கே. பூயன், 1949.*

8. பங்களா சாகித்யர் சம்பூர்ண இடிவிரிட்டா
   *ஏ. கே. பண்டோபாத்யாயா, 1966.*

9. ஹேமசந்திர கோஸ்வாமி ரசனாவளி
   *பி. சர்மா, 1972.*

10. கனக்லால் பருவா ரசனாவளி
    *என். தாலுக்தார், 1973.*

11. ஆனந்தராம் தீக்கியல்பூக்கன் – பிளீ டு அஸ்ஸாமிஸ் லாங்குவேஜ்
    *எம். நியோக், 1977.*

12. ஒரு நோடாய்ர் நாபட்
*பி. கே. பருவா, 1965.*

13. ஹேமசந்திர பருவா
*ஏ. ஹஸாரிக, பிரகாஷ் வால்யூம் 4, நம்பர் II, 1979.*

14. அஸ்ஸாமிய புத்திஜீபி ஹேமசந்திர பருவா
*ஆர். டி. கோஸ்வாமி, பிரகாஷ்*
*வால்யூம் 4 ; நம்பர் II, 1979.*

15. ஹேமசந்திர பருவா
*ஆர். டி. கோஸ்வாமி, அக்ஷபாணி, நவம்பர் 30, 1980*

16. கணியார் கீர்த்தன்
*எச். ஸி. பருவா, 1948.*

17. பஹூ-ஏரே ரங் – சங் பிடேரே கௌபாதுரி
*எச். ஸி. பருவா, 1908.*

18. பாத் - மாலா
*எச். ஸி. பருவா, 1920.*

19. நோட்ஸ் ஆன் தி மாரேஜ் சிஸ்டம்ஸ் ஆப் தி பீபுள் ஆப் அஸ்ஸாம்
*எச். ஸி. பருவா, 1908.*

20. அஸ்ஸாமிய பாசர் ஒஹா, ஹேமசந்திர பருவா
*ஜதீந்திரநாத் கோஸ்வாமி, 1985.*

117428
14.12.04

ஹேமசந்திர பருவா (*1835-1896*) சிறந்த எழுத்தாளர். பத்திரிகை ஆசிரியர்; அகராதி தொகுப்போன், இலக்கண கர்த்தா மற்றும் சமூக சீர்திருத்தவாதி. நவீன அஸ்ஸாமிய இலக்கியத்தின் தந்தை என்றே அழைக்கப்பட்டார்.

ஹேமசந்திரரின் **அஸ்ஸாமிய வியாகரன்** வாக்கிய அமைப்பிற்கும், எழுத்திலக்கணத்திற்கும் சரியான விதிமுறைகளை விவரித்தது. சந்தேகமின்றி அஸ்ஸாமிய மொழியைக் கையாள உதவிய இந்நூலே அஸ்ஸாமிய இலக்கியத்தின் முதல் நூலாகும். ஹேமசந்திரரின் **ஹேம்கோஸ்** ஒரு சிறந்த அகராதி. இன்றும் அவ்வாறே கருதப்படுகிறது.

பள்ளிப் புத்தகங்கள் எழுதும் பணியில், ஹேமசந்திரரின் பங்கு குறிப்பிடத்தக்கது. அஸ்ஸாமிய இலக்கியத்தில், திறனாய்வையும், வஞ்சப் புகழ்ச்சியையும், முதலில் புகுத்தியவர் இவரே.

'அஸ்ஸாம் செய்தி' என்ற பத்திரிகையின் ஆசிரியரான ஹேமசந்திரர் அதன் தரத்தை உயர்த்தினார். செய்திகளை அளிக்கும் பத்திரிகையாக மட்டுமல்லாமல் பொது விஷயங்களிலும் கவனம் செலுத்தியது அப்பத்திரிகை. சிறந்த உரைநடைக்கு எடுத்துக் காட்டாகவும் விளங்கியது. அவருடன், 'அவரது எழுத்து நடை அற்றுவிட்டது' எனலாம்.

இந்நூலாசிரியர் ஜதீந்திரநாத் கோஸ்வாமி (*1918*) ஒரு சிறந்த வாழ்க்கை வரலாற்றாசிரியர்; திறனாய்வாளர் மற்றும் கட்டுரையாளர் - பல நூல்களை பதிப்பித்திருக்கிறார். இச்சிறு நூலில், ஹேமசந்திரரின் வாழ்க்கை பற்றியும், நூல்கள் பற்றியும், பிறமொழி வாசகர்களுக்காக நன்கு எடுத்துக் கூறியுள்ளார்.

அட்டை அமைப்பு : சத்தியசித் ராய்

உருவ ஓவியம் : சைதாலி சாட்டர்ஜி

Library IIAS, Shimla
T 891.450 92 B 288 G
00117428